வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 02.05.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 144 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை










# நாடு முழுவதும் மே தின எழுச்சி!

- தமிழரசின் கூட்டம் கிளிநொச்சியில்
- முன்னணியின் கூட்டம் முல்லையில்!

யாழ்ப்பாணம், மே 02

சர்வதேச உழைப்பாளர் தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதை யொட்டி, வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதும் அரசியல் கட்சிகள், அமைப்புகள், தொழில் சங்கங்க ளால் கூட்டங்கள், பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

15

# இனப் பிரச்னைக்கு இந்த ஆண்டில் தீர்வு

## ஜனாதிபதி ரணில் உறுதி

- புதிய அரசமைப்பு மூலம் தீர்வு எட்டப்படும்
- பிரச்னையை தீர்க்க தமிழ் கட்சிகள் பின்னடிப்பு



கொழும்பு, மே 02

நாட்டின் அனைத்து சமூகங்களுக்கும் நன்மை பயக்கும்விதத்தில் நீண்ட காலம் நீடிக்கும் இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு இந்த ஆண்டில் உடன்பாட்டை எட்ட எதிர்பார்க்கிறேன். புதிய அரசமைப்பு மூலம் இனப் பிரச் னைக்கு தீர்வு காணப்படும் என்று உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

15

## ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் அரசாங்கத்தை வீழ்த்துவோம்!

### ஐக்கிய மக்கள் சக்தி சூளுரை

கொழும்பு, மே 02

ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் இந்த அர சாங்கத்தை வீழ்த்துவதே இந்த மே தினத்தில் எமது குறிக்கோளாகும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் ஜனாதிபதியுடனேயே அரசாங்கத்துக்கு செல் வோம். அந்த அரசாங் கத்தில் தற்போதைய நாணய நிதிய ஒப்பந்தம் நிச்சயம் புதுப்பிக்கப் படும் என்றும் அவர் கூறி யுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி யின் மே தினக் கூட்டம் கொழும்பில் நேற்று நடந் தது. இதில், உரையாற் றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், நாம் பதவிக ளுக்காக அரசியல் செய்ப வர்கள் அல்ல. எமது அர

15

## அதிகாரத்தை மக்களுக்காக நாம் விட்டுக்கொடுத்தோம்!

### மகிந்த ராஜபக்ஷ சொல்கிறார்



கொழும்பு, மே 02

அரசியல் செய்வதற்கு ஏதும் இல்லாததால் எதிர்க்கட்சிகள் பொருளா தார மீட்சிக்கான சிறந்த திட்டங்களையும் எதிர்க் கிறார்கள். பொய்யான விமர்சனங்கள் எழுந்த போது மக்களுக்காக அதி காரத்தை விட்டுக் கொடுத் தோம். மக்கள் தற்போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தேவையாயின்பலம் மிக்க சக்தியாக ஒன்றிணைந்து

15

## கொழும்பில் துப்பாக்கி சூடு ஒன்பது பேர் படுகாயம்!

கொழும்பு, மே 02

கொழும்பு - துறைமுக நுழைவாயில் அருகே நடத்தப்பட்ட துப்பாக் கிச் சூட்டு சம்பவத்தில் 9 பேர் காயமடைந்தனர்.

கொழும்பு துறைமுகத் தின் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புளூமெண்

15

## ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளர் ரணிலே!

### ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, மே 02

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிர மசிங்க தேசிய வேட்பாள ராக போட்டியிடுவது நிச்சயமாகும். அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் அவர் வெற்றி பெறுவதும் உறுதி என்று ஐக்கிய

15



## அல்லைப்பிட்டியில் விபத்து; இரு யுவதிகள் ஸ்தலத்தில் பலி!

### இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 02

எதிர்த் திசையில் வந்த கார் மோட்டார் சைக் கிளை மோதியதில் அதில் பயணித்த இரு இளம் பெண் கள் தூக்கிவீசப்பட்டு சம் பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

15

## தந்தை செல்வா காட்டிய வழியில் சுயாட்சி நோக்கிப் பயணிப்போம்!

### இலங்கை தமிழரசு கட்சி அழைப்பு

கொழும்பு, மே 02

தந்தை செல்வா உணர்த் திய சுயாட்சி நோக்கிய பயணத்தை ஓர் அஞ்சல் பரிமாற்ற போராட்டக்கா ரர்களாக ஆயிரம் ஆயி ரம் இளைஞர்கள் கையேற் கவுள்ளனர் என்று இலங்கை தமிழரசு கட்சி தனது மே தினப் பிரகட னத்தை வெளியிட்டுள் ளது.

இலங்கை தமிழரசு கட்சியின் மே தினக் கூட் டம் நேற்று கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் அந் தக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் சி. சிறீ தரன் தலைமையில் நடை பெற்றது. இங்கு வெளியி டப்பட்டன கொள்கை பிரகடனம் வருமாறு,

உழைப்பை மூலதன மாகக் கொண்டு இயங் குகின்ற அரசுகள் முதலாளித்துவ மனநிலையும்

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பான பிரேரணையை பாராளுமன்றில் சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்ட பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கத்துக்கு அல்லது அனைத்துக்கட்சி அரசாங்கத்துக்கு அழைப்பு விடுப்பார் என்றும் இதனையடுத்து எதிரணியிலிருந்து பலர் அரசுடன் இணைவார்கள் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த பல வாரங்களாக இதுபற்றியே ஊடகங்களும் தொடர்ந்து எழுதிவந்தன.

அவ்வாறு கட்சி மாறுவார்கள் என்று பலரின் பெயர்களையும் அவ்வப்போது ஊடகங்கள் தெரிவித்து வந்தபோதிலும் அவர்கள் யாரும் அந்த செய்திகளை மறுக்காததும் - அந்த செய்திகள் உண்மையானவை என்றே மக்களும் நம்ப வேண்டியதாயிற்று.

ஆனால், சஜித்தின் தீவிர விசுவாசிகள் சிலர் மாத்திரம் அப்படி யாரும் தமது கட்சியிலிருந்து செல்லமாட்டார்கள் என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தனர்.

இந்த எதிர்பார்ப்பு தொடர்பாக இந்தப் பத்தியிலும் தெரிவித்திருந்தோம்.

எதிர்பார்க் கப்பட்டதுபோலவே, ஜனாதிபதி ரணிலும் அனைத்து கட்சிகளையும் தனது அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். அதாவது சர்வகட்சி அரசுக்கு அழைப்பு விடுத்தார்.

ஆனால், பலரும் எதிர்பார்த்ததுபோல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து யாரும் பகிரங்கமாக ரணிலுக்கு ஆதரவு வழங்கவில்லை.

மிகக் கடைசியாக கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவான முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடுவதற்காக பதவியை ராஜிநாமா செய்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தெரிவாகியிருந்த பௌசி எம். பி. மாத்திரம் கட்சி முடிவுக்கு மாறாக பாராளுமன்றத்தில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை எதிர்க்கவும் முடியாமல் அரசுக்கு ஆதரவாகவும் வாக்களிக்காமல் ஐக்கிய மக்கள் சக்தி நடுநிலமை வகித்ததால் ரணிலுடன் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட பலரும் பாராளுமன்றம் வராமல் தாமும் நடுநிலைமை வகித்தனர்.

அப்படி என்னதான் நடக்கின்றது என்பதை அறிந்து கொள்ள ஊர்க்குருவி முயன்றது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறுவார் என்று நம்பப்பட்டவர்களில் முக்கியமானவர் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன. அவரே ரணிலுக்கு பகிரங்கமாகவும் ஆதரவாகவும் அவ்வப்போது கருத்துகளை தெரிவித்து அந்த ஊகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்திருந்தார்.

அவருக்கு நெருக்கமான ஒருவருடன் பேசியபோது சில விடயங்களை தெரிந்துகொள்ள முடிந்தது.

அவர் களுத்துறை மாவட்டத்தை சேர்ந்தவர். அந்த மாவட்டத்திலுள்ள சில பத்து ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவை பெற்றவர் அவர். அவர் அந்த மாவட்டத்திலிருந்து தொடர்ந்து தெரிவாகி வருவதற்கு அதுவும் ஒரு காரணம் என்பர்.

அதே மாட்டத்தில் பொதுஜன பெரமுனவின் முக்கிய தலைவராக இருப்பவர் ரோஹித அபேகுணவர்த்தன. அவருக்கு அமைச்சரவையில் இடம்கொடுக்குமாறு பொதுஜன பெரமுன நீண்டகாலமாகவே கோரிக்கை விடுத்து வருகின்றது.

பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான அவருக்கும் மற்றும் சிலருக்கும் அமைச்சரவையில் இடம் கொடுக்க ரணில் தொடர்ந்து மறுத்து வருகின்றார்.

இந்த நிலையில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ராஜிதவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படுமானால், ரோஹிதவுக்கும் வழங்கவேண்டும் என்று பெரமுன பிடிவாதமாக இருக்கின்றது.

அப்படி அவருக்கு வழங்கி, இவருக்கு வழங்காவிட்டால் அரசிலிருந்து வெளியேற வேண்டிவரும் என்ற அளவுக்கு தகவல் தெரிவிக்கப் பட்டிருக்கின்றதாம்.

இது ராஜிதவின் கதை என்றால், மற்றையவர்களின் கதை வேறு விதமானது.

அமைச்சரவையில் இன்னமும் பன்னிரண்டு பேருக்கு மாத்திரமே இடம் இருக்கின்றது. அவ்வாறு பன்னிரண்டு பேருக்கும் புதியவர்களை நியமிக்கும்போது தமது கட்சிக்கு நான்கு அமைச்சுகளை தரவேண்டும் என்று பெரமுன பிடிவாதமாக இருக்கின்றது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வரவிரும்புபவர்கள் எல்லோருமே அமைச்சர் பதவிகளை எதிர்பார்க்கிறார்களாம்.

அப்படி வருகின்ற எல்லோருக்கும் அமைச்சர் பதவி கொடுத்தால், இன்றைய பொருளாதார நிலைமையில் அவசியமற்ற செலவுகளை அரசாங்கம் செய்வதாக எதிரணிகள் கோஷம் போடுவர்கள். இதனால் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஜனாதிபதி தயாராக இல்லை என்றும் அதனாலேயே இந்த கட்சிமாற்றக் காட்சிகள் தாமதமாகவும் கொழும்பில் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது எதுவித பேரமும் பேசாமல், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்துக்கு ஆதரவு கோரிய பிரேரணைக்கு பாராளுமன்றில் ஆதரவு வழங்கிய பௌசியைப் போல, தன்னோடு சேர்ந்து இயங்க விரும்பும் எம். பிக்களை தனி அணியாக பாராளுமன்றத்தில் செயல்படுமாறும் அவர்களில் சிலருக்கு மட்டும் அமைச்சரவை பதவிகளை வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறாராம்.

இனி என்னதான் நடந்தாலும் பேரங்கள் - பேச்சுக்கள் தொடர்ந்தாலும் வெசாக் கொண்டாட்டம், அதற்கு பின்னர் பிரிட்டன் மன்னரின் பதவியேற்புக்காக பிரிட்டன் பயணம் என்று எல்லாம் முடிந்த பின்னரே எது நடந்தாலும் என்கின்றன கொழும்பு செய்திகள்.

**- ஊர்க்குருவி**

## பெருமளவு மக்கள் பங்கேற்புடன் சமத்துவ கட்சியின் மே தின கூட்டம்!

கிளிநொச்சி, மே 02

அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்ப்போம், மக்களின் உரிமைகளை மீட்டெடுப்போம் எனும் தொனிப்பொருளில் சமத்துவ கட்சியின் மே தினம் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்று பெருமளவான மக்களின் பங்கேப்புடன் இடம்பெற்றது.



சமத்துவக் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன் தலைமையில் நடைபெற்ற மே தின நிகழ்வில் மாவட்டத்தின் பல்வேறு தொழில்சங்கங்களின் பிரதிநிதிகள் சிவில் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் என பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

பல தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் எம். பியுமான மு. சந்திரகுமார் பேசுகையில், நாட்டில் சுதந்திரத்தையும் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக அதற்கு எதிராகவே ஆட்சி நடாத்தப்படுகிறது.

சுதந்திரத்துக்குப் பின்னர் நாடு சிந்திய கண்ணீரும் இரத்தமும் கொஞ்சமல்ல. இதிலிருந்து நாம் மீள வேண்டும். இனியும் சம்பிரதாயமான அரசியல் வாக்குறுதிகளை நாம் நம்ப முடியாது. சம்பிரதாயமான மேதின நிகழ்வை நடாத்துவதில் அர்த்தமில்லை.

இன்று பிற நாடுகளிலும் சர்வதேச வங்கிகளிடத்திலும் அடமானமாகியுள்ள நாட்டில் நாம் போராடாமல் இருக்க முடியாது. எமது போராட்டம் அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரானதாக இருக்கட்டும். மக்களின் விடுதலையை நோக்கியதாக அமையட்டும் எனத் தெரிவித்தார். (ஐ)

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் மன்னிப்பு கேட்க வேண்டும்!

### வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

கொழும்பு, மே 02

" பதுளை, மடுல்சீமை மக்களிடம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னிப்புகோர வேண்டும். அவ்வாறு இல்லையேல் ஐக்கிய மக்கள் சக்தியுடன் பயணத்தை தொடர்வதற்கு நான் தயாரில்லை." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நேற்று பதுளையில் நடந்த மே தினக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

" நாட்டில் தேசிய கொள்கைத்திட்டம் பற்றி பேசப்படுகின்றது. அவ்வாறு கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும்போது மலையக பெருந்தோட்ட மக்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். இந்நிலைமையை இனியும் அனுமதிக்க முடியாது. எமது மக்களும் இலங்கை பிரஜைகள்தான். அவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சனை காட்டப்படுகின்றது? இலங்கை மக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளும் எமது மக்களுக்கும் வேண்டும்.

எமது மக்கள் பயங்கரவாதிகள் அல்லர். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டவில்லை. நாட்டின் வன்முறைகளில் ஈடுபட்டதில்லை. நாடு மேம்பட உழைத்த அவர்களுக்கு ஏன் புறக்கணிப்பு? இன்னும் காணி உரிமை அற்றவர்களாக வாழ்கின்றனர். எங்கள் மக்களுக்கு உண்ண உணவில்லை, பாதுகாப்பாக வாழ காணி இல்லை. மக்கள் இப்படி தவிக்கையில் எனக்கு கட்சி, சின்னம் என்பன முக்கியம் இல்லை.



தற்போதைய சூழ்நிலைக்கமைய நாட்சம்பளமாக 3 ஆயிரத்து 250 ரூபா வழங்கப்பட வேண்டும். பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. எனவே, அந்த தொகையை வழங்குமாறு கம்பனிகளுக்கு ஜனாதிபதி கட்டளையிட வேண்டும்.

அதேவேளை, எமது மக்களை செல்லாக்காசாக கருத வேண்டாம் என எமது கட்சி தலைவர் சஜித்திடம் கூறுகின்றேன். அவர் மடுல்சீமை கூட்டத்துக்கு வரவில்லை. ஆக மடுல்சீமைக்கு வந்து அவர் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும். இல்லையேல் சஜித்துடன் எனது பய ணம் தொடராது." என்றார். (ஐ)

## பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஏப். 02

டீசல் விலை 15 ரூபாவால் குறைக்கப் பட்டுள்ளபோதிலும் பஸ் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுப் போக்குவரத்து சேவையை தரமான சேவையாக மாற்றுவதற்கு அமைச்சர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை-என்றார்.

இதேவேளை, பஸ் கட்டண திருத்தம் தொடர்பான கணக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## "மைத்திரியை பதவி நீக்குவதற்கான சதித் திட்டமே ஈஸ்டர் தாக்குதல்!"

கண்டி, மே 02

நல்லாட்சியின்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளக விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளுக்கும் , அழுத்தங்களுக்கும் இடமளிக்கவில்லை. எனவே, தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவரை பதவி நீக்குவதற்காக முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சதித்திட்டமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களாகும் என்று சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் சுதந்திரக் கட்சி தனித்தே போட்டியிடும். அதற்குரிய பலத்துடன் கட்சியை மீளக் கட்டியெழுப்புவோம் - என்றார். (ஐ)

Eelanadu ஈழநாடு
02.05.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# செல்வநாயகத்துக்கு சிலை?

எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 125ஆவது ஆண்டை நினைவுகூர்ந்து அவருக்கு சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. செல்வநாயகத்துக்கு சிலை வைப்பதில் ஆர்வம் காண்பிக்கும் குழுக்கள் - அந்த சிலையை திறந்து வைப்பதில் ஆர்வம் காண்பிக்கும் தமிழசு கட்சியின் தலைவர்கள் என்போர் எந்தளவுக்கு செல்வநாயகத்தின் அரசியல் நிலைப்பாடுகளை பின்பற்றுகின்றனர் என்பது கேள்விக்குறியாகும்.

செல்வநாயகம்தான் சமஷ்டி தீர்வை முன்வைத்து இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கியவர். அது தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1976இல் பிரிந்து செல்லும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்தார். ஆனால், செல்வநாயகத்தின் காலத்தில் செல்வநாயகம் முன்வைத்த எந்தவொரு விடயத்தையும் அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை. அவருக்குப் பின்னர் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமிர்தலிங்கமோ பின்னர் மாவட்ட சபையை நோக்கிச் சென்றார். ஆனால், அதே அமிர்தலிங்கம் பின்னர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மறுத்தார். இந்தப் பாரம்பரியத்தில் வந்த இரா. சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு - பின்னர் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு முன்னைய நிலைப்பாட்டிலிருந்து விலகியது.

ஆனால், செல்வநாயகத்தின் பார்வையில் அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் என்பன ஒரு தனிப்பாய்ச்சலில் நடந்துவிடும் ஒன்றல்ல. செல்வாவின் மருமகன் எழுதிய, செல்வநாயகம் தொடர்பான சுயசரிதையில், செல்வநாயகம் எவ்வாறான தலைவர் என்பதை குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, “கேக் கிடைக்கவில்லை என்பதற்காக - பாணை நிராகரிக்கும் தலைவர் அல்ல - செல்வநாயகம்”, என்று குறிப்பிட்டிருக்கின்றார். இதிலிருந்து செல்வநாயகத்தின் வாரிசுகள் என்போர், கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் என்ன?

செல்வநாயகம் சமஷ்டியைக்கூட தன்னால் அடைய முடியுமென்று நம்பியிருக்கவில்லை. ஆனால், அதனை ஓர் இலக்காகக் கொண்டிருந்தாலும் - அடையக்கூடியதை அடைந்துகொள்ள முயற்சிக்க வேண்டுமென்றே அவர் சிந்தித்தார். இதனால்தான், சமஷ்டியுடன் எவ்வித தொடர்பும் இல்லாத தீர்வுகளுக்காக சிங்கள ஆட்சியாளர்களுடன் உடன்பாடுளை மேற்கொண்டார். ஆனால், அதுவும் சரிவராதபோது அதிர்ஷ்டத்தை நம்பியவர் போன்று அல்லது கடவுகளை நம்பியவர் போன்றே தனிநாட்டு கோரிக்கையை நோக்கிச் சென்றார். ஆனால், அவரின் மனதில் இருந்தது கேக் இல்லையென்றால் பாணை சாப்பிடுவதுதான். இதனை சரியாகப் புரிந்து கொண்டால் 13ஆவது திருத்தச் சட்டத்தை மட்டுமே செல்வாவின் வாரிசுகள் கையிலெடுக்க வேண்டும். அவர்கள் உண்மையிலேயே செல்வாவின் வாரிசாக இருந்தால்.

# நிறுத்தாமல் சென்ற டிப்பர்மீது அதிரடிப் படை துப்பாக்கிச் சூடு

*வடமராட்சி, மே 02*

வடமராட்சி கிழக்கில் அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு சோதனையின்போது நிறுத்தாமல் சென்ற டிப்பர் வாகனம்மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

வடமராட்சி பகுதியில் கஞ்சா கடத்தப்டுவதாக விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இரவு வீதித்தடைகளைப் போட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

வடமராட்சி கிழக்கு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை அண்மித்த வலிக்கண்டிப் பகுதியில் இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பல வாகனங்கள் மறித்து சோதனையிடப்பட்டது. நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் மணல்காட்டுப் பகுதியிலிருந்து பருத்தித்துறை பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் சோதனையிடுவதற்காக மறித்துள்ளனர்.

ஆனால், வாகனம் நிற்காமல் வாகனம் விசேட அதிரடிப்படையினரை மோதித்தள்ளி விட்டு தப்பிக்க முயற்சித்தது. மோதலில் இருந்து தப்பிக்க அதிரடிப் படை சிப்பாய் பாய்ந்து வீழ்ந்ததில் காயமடைந்தார்.

இதையடுத்து மற்றொரு சிப்பாய் வாகனத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தினார். இதில், வாகனத்தின் பின்புற ரயர் துப்பாக்கி ரவை பட்டு காற்றுப் போனதில் ஓட முடியாது நின்றது.

அந்தச் சமயம் டிப்பரில் இருந்து இறங்கி இருவர் தப்பிச் சென்ற நிலையில் சாரதியை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர். வாகனத்தை சோதனையிட்டபோது சட்ட விரோதமாக மணல் கடத்தியமை தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட நபரும், கைப்பற்றப்பட்ட டிப்பரும் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். தப்பிச் சென்றவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காயமடைந்த சிப்பாய் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-02)

# அலிசப்ரி தென்கொரியா பயணம்!

*கொழும்பு, மே 02*

தென்கொரியாவின் இன்சியான் நகரில் இடம்பெறவுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56ஆவது வருடாந்த கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இன்று செவ் வாய்க்கிழமை பயணமாகிறார்.

இன்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை இக்கூட்டம் நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், முக்கிய உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் மூத்த ஊடகப் பிரதானிகள் உட்பட சுமார் 3,000 - 4,000 பங்கேற்பாளர்கள் கலந்துகொள்ளும் ஓர் உயர்மட்ட நிகழ்வாகும்.

4ஆம் திகதி இடம்பெறவுள்ள ஆளுநர்களுக்கான வர்த்தக அமர்வில் இலங்கையின் தற்போதைய பொருளாதார முன்னேற்றங்கள் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார். (ஐ)



# யாழில் வறிய மக்களுக்காக நடந்து நிதி சேர்க்கும் பிரிட்டன் இளைஞர்

*யாழ்ப்பாணம், மே 02*

‘புனர்வாழ்வும் புது வாழ்வும்’ என்ற அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கிலான நடைபயணம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.


பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் அந்த அமைப்பின் ஊடாக வறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான நடைபவனியில் பிரித்தானியாவை சேர்ந்த இளைஞர் ஒருவர் 55 கிலோ மீற்றர் வரை நடை பயணம் மேற்கொண்டு நிதி திரட்டி அதனைக் கொண்டு வறிய மக்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுக்கவுள்ளார்.

நடை பயணம் பருத்தித்துறை வீதி ஊடாக பருத்தித்துறைமுனையை அடைந்து மீண்டும் புத்தூர் சந்தியில் நிறைவடைந்தது.

இதன்மூலம் கிடைக்கப் பெறும் பணத்தைக் கொண்டு குடிதண்ணீர் அற்ற மக்களுக்கு கிணறுகளை அமைத்துக் கொடுத்தல் மற்றும் வீடற்றோருக்கு வீடுகளை கட்டிக் கொடுத்தல் பாடசாலைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றுக்காக செலவிடப்படவுள்ளது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 02 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 19
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனநிறைவு பெறும் நாள்.

**இடபம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பார்ப்புகள் விலகும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். மெிகவும் கவனம் தேவை. வாகனத்தை சீர் செய்வீர்கள். புது யுக்திகளை கையாளுவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புது தொடர்பு கிடைக்கும். உழைப்பிற்கு அதிகாரிக ளின் மூலம் அங்கீகாரம் கிடைக்கும். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். விட்டு கொடுத்து போக வேண்டிய நாள்.

**கன்னி**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். புது முதலீடு செய்யலாம். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**துலாம்**
உங்களின் அணுகுமுறையால் மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்து கொள்வீர்கள். புது தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உங்களாலும் முடியும் என்று சாதித்துக் காட்டும் நாள்.

**தனுசு**
உற்சாகமடைவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமையால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சமங்களை புரிந்துக் கொள்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் கிட்டும் நாள்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

# 12 மணிநேர தொழில் சட்டம் மீளப்பெறப்பட்டதாக அறிவிப்பு

சென்னை, மே 02

12 மணி நேர பணி சட்டத்தை மீளப் பெறப்பட்டுள்ளதாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தொழிலாளர் தினமான நேற்று அறிவித்துள்ளார்.

உழைப்பாளர் தினமான நேற்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் மே தினப் பூங்காவில் அமைந்துள்ள நினைவுச் சின்னத்துக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் பேசியது: “தமிழ்நாட்டில் பெரும் முதலீடுகளை ஈர்த்திட வேண்டும். அதுமட்டுமல்ல, அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும். அதிலும் குறிப்பாக, தென் மற்றும் வட மாவட்டங்களில் அந்த வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற அந்த நோக்கில்தான் தமிழ்நாடு அரசால் ஒரு சட்டமுன் வடிவு கொண்டுவரப்பட்டது.

இது அனைத்து தொழிற்சாலைகளுக்குமான சட்ட திருத்தம் அல்ல. மிகமிகச்சில குறிப்பிட்ட வகை தொழிற்சாலைகளுக்கு மட்டுமே அதுவும் நிபந்தனைகளுடன் - கட்டுப்பாடுகளுடன் அரசின் பரிசீலனைக்குப் பின்பே பணிநேரம் குறித்த விதிவிலக்கு வழங்கப்படும் என்பதே அந்த சட்டத்தினுடைய திருத்தம். தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய பல்வேறு அம்சங்கள் அதில் இருந்தன. ஆனாலும் தொழிற்சங்கத்தை சார்ந்தவர்களுக்கு அதில் சில சந்தேகங்கள் இருந்தன. அதனால் பல்வேறு கோணங்களில் அது விமர்சனம் செய்யப்பட்டது.

தி. மு. க. அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தமாகவே இருந்தாலும் தி. மு. கவினுடைய தொழில்சங்கமும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததுதான் அதில் வேடிக்கை. அதற்காக நான் அவர்களை பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். தி. மு. க. எத்தகைய ஜனநாயக மாண்பு கொண்ட அமைப்பு என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.

இத்தகைய விமர்சனம் வந்ததும், உடனடியாக அனைத்து தொழிற்சங்கத் தோழர்களையும் கோட்டைக்கு அழைத்து அமைச்சர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப் பிறகு தொழிற்சங்கத்தின் கருத்துக்களைக் கேட்டு, உடனடியாக எந்தவித தயக்கம் இன்றி, துணிச்சலோடு அதைத் திரும்பப் பெற்றிருக்கக்கூடிய அரசு தான் நம்முடைய அரசு - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. கட்சியை பாதுகாப்பதற்கான வாய்ப்பை அண்ணாமலை உருவாக்கினார்!

திருவண்ணாமலை, மே 02

அ. தி. மு. கவை பாதுகாக்க அரசியல் களத்தில் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலையே வாய்ப்பை உருவாக்கி கொடுத்தார் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் எம். பி. தெரிவித்துள்ளார்.

“விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கர்நாடாகவில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக வாக்குகள் சேகரிப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி தலைவர்களுடன் நாளை (இன்று) அறிவிக்க வுள்ளேன்.

கர்நாடாகவில் பா. ஜ. க. ஆட்சியை தூக்கி எறியவும், அப்புறப்படுத்தவும், இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். கர்நாடாகாவில், தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை பங்கேற்றிருந்த நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிக்கப்பட்டதற்கு, அவர் விளக்கமளிக்க வேண்டும். அ. தி. மு. கவுக்கு நல்ல வாய்ப்பு உருவானது.

அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தமிழகத்துக்கு நல்லதல்ல. அ. தி. மு. கவுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். எல்லாம் அறிந்தும், தன்னுடைய தனிப்பட்ட நலனுக்காக, தன்னை தற்காத்துக் கொள்வதற்காக, மத்திய அரசின் அச்சுறுத் தலுக்கு பணிந்து, இந்த நிலைப்பாட்டை பழனிசாமி மேற் கொண்டிருக்கிறார். அ. தி. மு. க. தொண்டர்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

# அடுத்த மாதமே தேர்தல் வந்தாலும் மதசார்பற்ற கூட்டணி வெற்றிபெறும்!

விருதுநகர், மே 02

பாராளுமன்ற தேர்தல் அடுத்த மாதமே வந்தாலும் தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் 40 தொகுதிகளிலும் மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு விருதுநகரில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாநிலச் செயலர் பாலகிருஷ்ணன் நேற்று கட்சிக் கொடியை ஏற்றிவைத்து மே தின உரையாற்றினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பெருநிறுவனங்களுக்கு துணை போகிற பா. ஜ. க. அரசை வீழ்த்த தொழிலாளர்கள் இந்நாளில் உறுதியேற்க வேண்டும். சமீபத்தில் சட்டமன்றத்தில் தொழிற்சாலை சட்டத் திருத்தம் வந்தபோது 12 மணி நேர வேலை என்பதை எதிர்த்து வெளிநடப்பு செய்ததோம். எதிர்ப்பு உணர்வை புரிந்து கொண்ட தமிழக முதல்வர் அந்த சட்டத்தை திரும்ப பெற்றிருக்கிறார். சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது. சாதிய ஏற்றத்தாழ்வு இன்றைக்கும் கொடிகட்டி பறந்து கொண்டிருக்கிறது.

எப்போது எம். பி. தேர்தல் வந்தாலும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி அதற்கு தயாராக இருக்கிறது. அடுத்த மாதமே தேர்தல் வந்தாலும் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் 40 தொகுதிகளிலும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும். தமிழகத்தில் பா. ஜ. க. வெற்றிபெற முடியாது. நாடு முழுவதும் பாஜகவின் தோல்வி கணக்கு எழுத ஆரம்பிக்கப் பட்டு விட்டது”, என்றார். (ஐ)

# தி. மு. கவுடன் ம. தி. மு. கவை இணைக்கும் எண்ணமில்லை!

## வைகோ தெரிவிப்பு

சென்னை, மே 02

ம. தி. மு. கவை தி. மு. கவோடு இணைக்கும் எண்ணம் இல்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “ம. தி. மு. கவில் தற்போது உள்கட்சித் தேர்தல் நடைபெற்று வருகிறது. 70 சதவீத தேர்தல்முடிந்துள்ளது. அனைவரும் ஒற்றுமையாக இருந்து தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறோம். சிறு சல சலப்பும் எங்கும் கிடையாது. விரைவில் கட்சியின் பொதுக் குழு கூட இருக்கிறது. ம. தி. மு. க. தற்போது முக்கிய காலகட் டத்தில் இருக்கிறது. ம. தி. மு. கவை, தி. மு. கவோடு இணைத்து விட வேண்டும் என கட்சியின் அவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி கூறி இருப்பது குறித்து கேட்கிறீர்கள்.

ம. தி. மு. கவை தி. மு. கவோடு இணைக்கும் எண்ணம் இல்லை. அவருக்கு வேண்டுமானால், உள்நோக்கம் இருக்கலாம். ம. தி. மு. கவின் 99.90 சதவீத தொண்டர்களுக்கு அத்தகைய எண்ணம் இல்லை. கட்சியில் குழப்பம் இருப்பதுபோல சித்தரிக்க முயற்சி நடந்தது. அந்த முயற்சி தோற்றுப்போய்விட்டது. இதற்கு மேல் திருப்பூர் துரைசாமிக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை. பொதுக்குழு கூட்டத்துக்குப் பிறகு ம. தி. மு. க. இன்னும் வேகமாக செயல்படும்” என தெரிவித்தார். (ஐ)

# கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்பியது அமெரிக்காவே!

## இராஜாங்க அமைச்சர் பரபரப்பு தகவல்

கொழும்பு, மே. 02

**பிரபாகரனின் கதையை முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கியவர்களுக்கே அமெரிக்கா பயணத்தடை விதித்து வருகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவைக்கூட அமெரிக்காவே வீட்டுக்கு அனுப்பிவைத்தது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தை நாடவேண்டும் என எதிர்க்கட்சிகளே வலியுறுத்தின. ஆனால் அந்தத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சியினர் சபையில் இருக்கவில்லை. இதன்மூலம் அவர்களின் நோக்கம் தெளிவாகின்றது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டுக்கு அவசியம். தற்போது புதிய சில பயங்கரவாதிகள் உருவாகியுள்ளனர். அரசிடம் சம்பளத்தை வாங்கிக் கொண்டு, விடைத்தாள் திருத்தாமல் உள்ளனர். மாணவர்களுக்கு கல்வி கற்கவிடாமல் அவர்களை வீதிக்கு அழைத்து வருகின்றனர். இப்படியான பயங்கரவாதிகளும் உள்ளனர். இவர்கள்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்க்கின்றனர்.

அதேவேளை, பிரபாகரனின் கதையை முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கிய படையினருக்கு அமெரிக்கா தடை விதிப்பது வழமை. தமது நண்பர் இறந்துவிட்டதால் அவர்களுக்கு (அமெரிக்கா) கவலை இருக்கும். இதனால்தான் கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கே விரட்டினர்- என்றார்.

(அ)

# டெண்டுல்கரின் மகனுடன் சஜித்தை ஒப்பிட்ட ஹரீன்!

கொழும்பு, மே. 02

“இந்தியாவில் தற்போது ஐ.பி.எல்.போட்டி நடைபெற்றுவருகின்றது. இதில் சச்சின் டெண்டுல்கரின் மகனும் விளையாடுகின்றார். ஆனால் அவர் சச்சின் போல பிரகாசிக்கவில்லை. சச்சின் டெண்டுல்கரின் மகன் என்பதற்காக அவரால் சச்சின் ஆகிவிட முடியாது.

அதேபோலவே அந்த ஜனாதிபதி ( ரணசிங்க பிரேமதாஸ) சிறப்பாக செயற்பட்டார் என்பதற்காக அவரின் மகனால் (சஜித்) சிறப்பாக செயற்பட முடியாது.”

இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், சஜித் மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் மீது சரமாரியாக சொற்கணைகளையும் அவர் தொடுத்தார்.(அ)

# ஓட்டோ கட்டணம் குறையாது

கொழும்பு, மே. 02

பெட்ரோல் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்கமுடியாது என ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

92-ஒக்டேன் பெற்றோல் விலை 7 ரூபாவால் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளது. எனவே அது தற்போதுள்ள கட்டணத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என அந்தச் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்தார்.

ஓட்டோவுக்கு வழங்கப்படும் வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி ஆகியன எரிபொருள் விலையை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு ஜனாதிபதி செயலணி

கொழும்பு, மே. 02

நாட்டில் செயற்கை நுண்ணறிவு பாவனையை ஊக்குவிப்பதற்காக துறைசார் நிபுணர்கள் அடங்கிய ஜனாதிபதி செயலணியொன்றை பெயரிட்டு அவர்களின் விபரங்களை சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பான கோட்பாட்டு ஆவணமொன்றை தயாரிக்குமாறும் தொழில்நுட்ப அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்திக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விவசாயம், கல்வி, சுகாதாரம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் உள்ளிட்ட பல துறைகளில் மேலும் அபிவிருத்திக்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது குறித்து அதிகாரிகளின் கவனத்திற்கு ஜனாதிபதி கொண்டு வந்தார்.

தற்போது இலங்கையில் கணனி தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மூலம் மொத்த தேசிய வருமானத்தில் வருடாந்த பங்களிப்பு சுமார் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும், இதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் ஈட்டப்படும் வருமானம் எவ்வளவு என அறியப்படவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அந்த தொகையை கண்டறிவதற்கான முறைமை ஒன்றை தயாரிக்குமாறும் அவர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அடுத்த சில ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்படும் வருமானத்தை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, “விவசாயம் மற்றும் மீன்பிடித்துறையின் நவீனமயமாக்கல், சுற்றுலாத் துறை, விநியோக மையங்களை மேம்படுத்துதல் போன்ற நமது பொருளாதார சீர்திருத்தங்களுடன் அவசரமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது தவிர, நாங்கள் தொழில்நுட்ப துறையில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இன்று உலகம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறிவரும் நிலையில் இலங்கையும் செயற்கை நுண்ணறிவில் அதிக கவனம் செலுத்தி, அதில் அதிக முதலீடு செய்ய வேண்டும். இதனை தனியார் துறை ஊடாகவே மேற்கொள்ளவேண்டும்- என்றார்.

(அ)

# அமைச்சரவை சீரமைப்பு ஒத்திவைப்பு; கடும் கவலையில் மொட்டு கட்சியினர்

கொழும்பு, மே. 02

உத்தேச அமைச்சரவை மறுசீரமைப்பு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. இதனால் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கவலையில் உள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறவுள்ளது என கடந்த காலங்களில் தொடர்ச்சியாக தகவல்கள் பரவிய நிலையில், தமக்கு பதவிகள் கிடைக்கும் என மொட்டு கட்சியின் எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

மொட்டு கட்சியில் யார், யாருக்கு பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற பெயர் பட்டியலும் ஜனாதிபதிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும், அமைச்சரவை மாற்றம் தற்போது நடைபெறாது என ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணத்தை குறைக்க அவதானம்

கொழும்பு, மே. 02

பாடசாலை போக்குவரத்து சேவையின் கட்டணத்தை குறைப்பதற்கு அகில இலங்கை பாடசாலை போக்குவரத்துச் சேவை சங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளமையினால், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறைக்கப்படும் கட்டணம் தொடர்பான இறுதி தீர்மானம் இன்று இடம்பெறவுள்ள செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால், பெற்றோர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, விலைகுறைப்பின் நன்மையினை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவுள்ளதாகவும் அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவைச் சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா கூறினார்.

(அ)

# யாழில் 11 சிறுவர் உள்ளிட்ட 229 பேர் கடந்த 16 மாதங்களில் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், மே. 02

கடந்த 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2023ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரையில் யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்கு உட்பட்ட 11 சிறுவர்கள் தவறான முடிவை எடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர்.

யாழ்.மாவட்ட பொலிஸாரின் புள்ளிவிவரம் ஊடாகவே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு 175 பேர் தவறான முடிவெடுத்து தமது உயிர்களை மாய்த்துள்ளனர். இவர்களில் 09 பேர் 18 வயதிற்குள் உட்பட்ட சிறுவர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 116 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 59 பேரும் உயிர் மாய்த்துள்ளனர்.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரையிலான கால பகுதியில் 54 பேர் உயிரை மாய்த்துள்ளனர். அவர்களில் இருவர் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 39 பேரும், யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 15 பேரும் உயிரை மாய்த்துள்ளனர்.

அதேவேளை இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரம் வரை யாழ்.மாவட்டத்தில் 50 பேர் உயிர் மாய்க்க முற்பட்ட நிலையில், உறவினர்களால் காப்பாற்றப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே. 02

வீட்டுத்தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகும் என தெரிவித்து ஹற்றனில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் தன்னார்வ சமூக பாதுகாப்பு அமைப்பொன்றினால் மேற்கொள்ளப்பட்டது.

தொழிலாளர்கள் தொழில் தருநர்களிடமிருந்து பாதுகாக்கப்படுவது அவசியமாகும் என்பதோடு, வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் அனைவரின் பாதுகாப்பினையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

(அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, மே. 02

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2261ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், உழைக்கும் பராயத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி கோரி அவர்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மே நாளான நேற்று அதற்கான எதிர்ப்பை வெளியிட்டும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் முன்பாக ஏ-9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது.



(அ)

# எரிபொருள் விலையை ஐ.ஓ.சியும் குறைத்தது

கொழும்பு, மே. 02

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்துக்கு அமைவாக, லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் தமது எரிபொருட்களின் விலைகளை நேற்று முதல் அமுலாகும் வரை குறைத்துள்ளது.

அதன்படி, ஒக்ரேன் 92 ரக பெற்றோலின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய விலை திருத்தத்துக்கு அமைவாக பெற்றோல் லீற்றரின் புதிய விலை 333 ரூபாவாக குறைக்கப்பட் டுள்ளது.

அதேபோல், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 365 ரூபாவாக உள்ளது.

மேலும், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 310 ரூபாவாகும்.

(அ)

# வடக்குக் கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும்

## கடற்றொழிலாளர் சம்மேளனம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே. 02

வடக்கு கடற்தொழிலாளர்களின் பிரச்சினைகள் உலக தொழிலாளர் தினத்தில் சரி தீர்க்கப்பட வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு கடற்பரப்பில், நீண்ட காலமாக சட்டவிரோதமான கடற்றொழில் முறைகள் மற்றும் கடலட்டைப் பண்ணை என்பவற்றால் அதிகளவில் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த தொழிலாளர் தினத்திலாவது கடற்றொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும்.

அத்துடன் கடல் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து கடற்றொழிலாளரின் பிரச்னைக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை ஜனாதிபதியை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை-என்றார்.

# இலக்கை தாண்டியுள்ளது இறைவரித் திணைக்களம்

கொழும்பு, மே. 02

முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தமது வரி வருமான இலக்கைத் தாண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலக்கு வருவாயை விட 105 வீதம் அதிகமாக வருமானம் ஈட்டியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஊராபொல பிரதேசத்தில் நடந்த நிகழ்வில்கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று ஒரு தேசிய ஊடகத்தில் முதல் காலாண்டில் எதிர்பார்த்த வருவாயில் 19 வீதம் மட்டுமே ஈட்டப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செய்தி முற்றிலும் தவறானது.

மேலும், முதல் காலாண்டில் சுங்கத்துறை எதிர்பார்த்த வருவாயில் 89 வீதம் ஈட்டியுள்ளது. மதுவரி திணைக்களம் 64 வீத வருமானம் ஈட்டியுள்ளது-என்றார்.

(அ)

# நிறைக்கு ஏற்ப முட்டைகள் விற்பனை கட்டாயமில்லை

## நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு, மே. 02

முட்டைகளை அதன் நிறைக்கு ஏற்ப விற்பனை செய்வது கட்டாயம் இல்லை என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டைகளை விற்பனை செய்வது அதன் நிறைக்கு ஏற்றவாறே என சில வர்த்தக நிலைய உரிமையாளர்கள் நுகர்வோருக்கு தெரிவித்து வருகின்றனர்.

எனினும், அரசாங்கத்தினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முட்டைகளின் நிறைக்கேற்ப விற்பனை செய்யுமாறு பணிக்கப்படவில்லை என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்த வர்த்தகர்களை கண்டறிவதற்கான விசேட சோதனை கொழும்பு புறக்கோட்டை புனித ஜோன் வீதி பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 55 ரூபாவிற்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேநேரம் முட்டையை மறைத்து வைத்து விற்பனை செய்த வர்த்தகருக்கு எதிராக வழக்கு தொடரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பாடசாலை மாணவர்களுக்கு போதைமாத்திரை விநியோகித்த வெல்லே சுரங்கவின் சகா கைது!

கொழும்பு, மே. 02

பாரியளவிலான போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் வெல்லே சுரங்க எனப்படும் சுரங்க பிரதீப்புக்கு நெருக்கமான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த போது அவர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மட்டக்குளிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கைது இடம்பெற்றுள்ளது.

அதன்போது, அவரிடம் இருந்து சுமார் 1000 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

35 வயதுடைய சந்தேகநபர் போதைப்பொருள் மற்றும் மாத்திரைகள் விற்பனையில் ஈடுபடும் ஒருவரென தெரியவந்துள்ளது.

(அ)

# புத்தளம் பகுதியில் ஒருவர் கம்பியால் தாக்கி கொலை

கொழும்பு, மே. 02

புத்தளம் நுரைச்சோலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தழுவ பகுதியில் இரும்புத் தடியால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

30 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் மாலை கிரிக்கெட் மைதானத்தில் இருவருக்கும் இடையில் தகராறு இடம்பெற்றுள்ளதாகவும் இதன்போது உயிரிழந்தவரின் முகத்தில் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தாக்கப்பட்ட நபர் வீட்டிற்கு வராதமையின் காரணத்தினால் குறித்த நபரை உறவினர்கள் தேடியுள்ளனர்.

இதன்போது தாக்கப்பட்ட நபர் வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலுள்ள மணல் திடலில் சடமாக காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு நுரைச்சோலைப் பொலிஸார் மற்றும் தடவியல் பொலிஸார் நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர்.

இதன்போது தலையில் பொல்லால் தாக்கிய காயங்களும் காலில் வெட்டுக்காயங்களும் காணப்பட்டதாக தடவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர் தப்பிவிட்டதாகவும் மோப்ப நாயின் உதவியைக் கொண்டு சந்தேக நபரைத் தேடும் பணியில் ஈடுபட்டுவருவதாகவும் பொலிஸார் கூறினர்.

(அ)

# பிரபல தொலைக்காட்சி நாடக நடிகர் காலமானார்!


கொழும்பு, மே. 02

இலங்கையின் பிரபல தொலைக்காட்சி நாடக நடிகர் ஜி. ஆர். பெரேரா தனது 83 ஆவது வயதில் நேற்று காலமானார்.

நீண்ட நாட்களாக சுகவீன முற்றிருந்த அவர் நேற்று தனது வீட்டில் காலமானார்.

5 தசாப்தங்களுக்கு மேலாக 600 க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நாடகங்களில் நடிகர் பெரேரா நடித்துள்ளமை குறிப்படத்தக்கது.

(அ)



# குவைத் வாகன விபத்தில் இலங்கை பணிப்பெண் பலி!

கொழும்பு, மே. 02

குவைத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குவைத் பிரஜையான 21 வயதுடைய இளைஞன் ஒருவர் பொறுப்பற்ற முறையில் வாகனத்தைச் செலுத்திய நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் இலங்கையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞன் தைமா பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக குவைத்தை தளமாகக்கொண்டியங்கும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(அ)

# ஒவ்வொரு இலங்கையருக்கும் கோட்டாவால் ரூ.359,000 இழப்பு!

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 02

**கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வந்ததன் மூலம் ஒவ்வொரு இலங்கையர்களும் 359,000 ரூபாவை இழந்துள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் 8 வீதக் கடன் வட்டியை செலுத்தாவிடின் கடன் 2030 இல் இரட்டிப்பாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

நாட்டில் பொருளாதார குற்றவியல் நீதிமன்றமொன்று ஸ்தாபிக்கப்படவேண்டுமென தெரிவித்த அவர், நிதி ஒப்பந்தப் பத்திரம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் மட்டும் அதற்கு சட்டபூர்வ அங்கீகாரம் கிடைக்காது எனவும் குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் சுதந்திரத்திற்கான கட்டளைகள், கொள் முதல் செயல்முறையை சரி செய்வதற்கான கட்டளைகள், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருவாயை அதிகரிப்பதற்கான கட்டளைகள் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்னைகள் தொடர்பான தனியான சட்டங்களை அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



2019 கோட்டாபய ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தி 89 பில்லியன் டொலர்களாக இருந்தபோதிலும் 2020 இல் 85 பில்லியன் டொலர்களாகவும் 2022 இல் 75 பில்லியன் டொலர்களாகவும் அது குறைந்தது. கோட்டாபய ஆட்சிக்கு வராமல் இருந்திருந்தால் மொத்த உள்நாட்டு உற்பத்தி 123 பில்லியன் டொலர்களாக இருந்திருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# காய்கறிகளின் நுகர்வு உயர்வு!

கொழும்பு, மே. 02

காய்கறி நுகர்வு சுமார் 40 வீதம் அதிகரித்துள்ளது. காய்கறிகளின் மொத்த விற்பனை விலை குறைந்துள்ளதாலும், சில்லறை சந்தையில் விலை ஸ்திரமாக உள்ளதால் நுகர்வு அதிகரித்துள்ளதாகவும் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

சில வருடங்களுக்கு பின்னர் மரக்கறிகளின் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மனிங் வர்த்தக சங்கத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

பெறப்பட்ட அனைத்து மரக்கறிகளின் விலையும் ஒரு கிலோ இருநூறு ரூபாவை தாண்டவில்லை எனவும் நேற்று முன்தினம் சுமார் 07 இலட்சம் கிலோ மரக்கறிகள் கிடைத்துள்ளதாகவும் தம்புள்ளை விசேட பொருளாதார வர்த்தக நிலையத்தின் தொழிற்சங்க செயலாளர் ஐ.ஜி. விஜயானந்தா தெரிவித்தார். (அ)

# மலையகத்தில் அடை மழையினால் வீடுகள், விவசாய நிலங்கள் பாதிப்பு

கொழும்பு, மே. 02

மலையகத்தில் பிற்பகல் வேளையில் பெய்து வரும் அடை மழை காரணமாக வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் சிறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நுவரெலியா - கந்தபளை பகுதிகளில் கடும் மழை காரணமாக பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கால்வாய்கள் முறையாக பராமரிக்கப்படாததன் காரணமாக வெள்ளம் ஏற்பட்டு இந்த விவசாயக் காணிகள் மூழ்குவதற்கு முக்கிய காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்தோடு, தோட்டங்களை அண்டிய வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளதையும் காணக்கூடியதாக இருந்தது.

மழை காரணமாக நுவரெலியா - உடபுஸ்ஸலாவ பிரதான வீதியின் போக்குவரத்தும் சில மணித்தியாலங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 23,000 தொழிலாளர் வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில்!

கொழும்பு, மே. 02

தொழிலாளர்கள் தங்களுக்கு நேர்ந்த பல்வேறு அநீதிகள் தொடர்பாக தாக்கல் செய்த 23ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாகவும் சில வழக்குகள் ஐந்து முதல் பத்து வருடங்கள் பழமையானவை என்றும்

தொழிலாளர் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்தார்.

மற்ற வழக்குகளுக்கு நீதிவான் நீதிமன்றங்கள் முன்னுரிமை கொடுப்பதால் தொழிலாளர் வழக்குகளில் தாமதம் ஏற்படும் நிலை உள்ளது என தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாகவே 2022ஆம் ஆண்டு தொழில் தகராறுச் சட்டத்தில் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன என்று கூறினார்.

இந்த வழக்குகளை விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் தொழிலாளர் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார்.

மேலும், தனியார் மற்றும் அரச ஊழியர்களிடமிருந்து உரிமைப் பலன்களைப் பெறாதமை தொடர்பாக தொழில் திணைக்களத்தால் ஒதுக்கப்பட்ட 4,596 வழக்குகள் கடந்த ஆண்டு செயலிழந்ததாக கணக்காய்வாளர் திணைக்களத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (அ)

# வடிவேல் சுரேஷுடன் இணைந்தார் மனோ கட்சியின் வேலுகுமார் எம். பி.!

பதுளை, மே 02



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் மே தின பேரணி பதுளை நகரில் அதன் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரும் இணைந்திருந்தார்.

அத்துடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அலியும் பங்கேற்றிருந்தார். (ஐ)

# வெளிநாட்டு பணியாளர்களுக்கு தீர்வை வரி சலுகை அதிகரிப்பு!

கொழும்பு, மே 02

வெளிநாட்டு பணியாளர்களுக்கு விமான நிலையங்களில் வழங்கப்படும் தீர்வை வரிச் சலுகை நேற்று திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐந்து கட்டங்களின் கீழ் இந்த வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படுவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

2400 முதல் 4799 டொலர் வரை அனுப்பும் வெளிநாட்டு பணியாளர்களுக்கு 600 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

4800 முதல் 7199 டொலர் வரை அனுப்பிவைப்போருக்கு 960 டொலர் மேலதிக தீர்வை வரிச் சலுகை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

# ஐக்கிய மக்கள் சக்தி காணாமல்போய்விடும்!

## ஐ.தே.க. கூறுகின்றது

கொழும்பு, மே. 02

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியமக்கள் சக்தி, எதிர்காலத்தில் முகவரியற்று காணாமல் போய்விடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்- கட்சிகள் உருவாகலாம். இலங்கை வரலாற்றில் அவ்வாறு உருவாகியும் உள்ளன. எனினும், அவை நிலைப்பதில்லை. ஐக்கிய மக்கள் சக்திக்கும் இதே கதிதான் ஏற்படும்.

நாட்டின் நலன் கருதி செயற்பட்ட பௌசிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அதாவது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தமது கட்சி எதிர்ப்பு என்பதையே அக்கட்சி இதன்மூலம் கூற விளைகின்றது.

தமது அணி சந்தர்ப்பவாத அரசியலையே நடத்துகின்றது என்பதை நிரூபிக்கும் வகையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானம் மீதான வாக்கெடுப்பை ஐக்கிய மக்கள் சக்தி தவிர்த்தது-என்றார். (அ)

# இலங்கையை வந்தடைந்தார் இந்திய விமானப்படை தளபதி






கொழும்பு, மே. 02

இந்திய விமானப் படை பிரதானி எயார் சீப் மார்ஷல் சுவுத்ரி, நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கையை வந்தடைந்தார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புத் துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை அவர் சந்திக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடன் எல்லை ஒப்பந்தத்தை விரும்பும் பூட்டான்: இந்தியா இதை ஏற்குமா?

அன்பரசன் எத்திராஜன்

சீனா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு ஆசிய ஜாம்பவான்களுக்கு இடையே இமயமலையை ஒட்டி அழகிய நாடாக அமைந்திருக்கிறது பூடான். ஆனால் அதன் தனித்துவமான புவியியல் நிலை காரணமாக அங்கே பிரச்னையும் இருக்கிறது.

சீனா தனது நில எல்லை பிரச்னைகளை தீர்த்துக் கொள்ளாத இரண்டு நாடுகளில் பூடானும் ஒன்று. மற்றொரு நாடு இந்தியா. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இமய மலை எல்லைப்பகுதியில் நீண்டகாலமாக கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

சீனாவின் உலகளாவிய எழுச்சியானது பெய்ஜிங்குடன் ஒரு ஒப்பந்தத்தை எட்ட பூடானுக்கு அழுத்தம் கொடுக்கிறது. ஆனால் இதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் பூடானின் நட்பு நாடான இந்தியாவின் ஒப்புதல் தேவைப்படும்.

திம்புவும் (பூடான் தலைநகரம்), டெல்லியும் நெருங்கிய உறவைப் பகிர்ந்து கொள்கின்றன. மேலும் இந்தியா லட்சக்கணக்கான டாலர்கள் நிதி மற்றும் ராணுவ உதவிகளை திம்புவுக்கு வழங்கி வருகிறது.

இமயமலையின் வடக்கு மற்றும் மேற்கு பகுதி நிலப்பரப்பை பகிர்ந்து கொள்வதில் பூடானுக்கும் சீனாவுக்கும் இடையே பிரச்னைகள் இருக்கின்றன.

குறிப்பாக போர் முக்கியத்துவம் வாய்ந்த டோக்லாம் பீடபூமியை சுற்றியே முக்கிய பிரச்சனை நிலவுகிறது.

இது இந்தியா, பூடான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு இடையில் இருக்கும் முக்கோண சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ளது. பூடானும் சீனாவும் இப்பகுதிக்கு உரிமை கோருகின்றன. திம்புவின் நிலைப்பாட்டை இந்தியா ஆதரிக்கிறது.

திம்புவுக்கு ஆதரவளிக்க இந்தியாவுக்கு அதன் சொந்த காரணங்கள் உள்ளன. சீனர்களின் எந்த விதமான ஆதிக்கமும் 'சிக்கன்ஸ் நெக்' எனப்படும் சிலிகுரி காரிடாருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால் டோக்லாம் பீடபூமி இந்திய பாதுகாப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

22 கிமீ (14 மைல்) நீளமுள்ள இந்தப் பகுதி, இந்திய நிலப்பரப்பை அதன் வடகிழக்கு மாநிலங்களுடன் இணைக்கிறது.

பூடான் பிரதமர் லோடே ஷெரிங் சமீபத்தில் பெல்ஜிய செய்தித்தாள் லா லிப்ரேக்கு இது தொடர்பாக ஒரு பேட்டி அளித்தார்.

'பூடான் மட்டுமே பிரச்சனையை தீர்க்க முடியாது. நாங்கள் மூன்று பேர் உள்ளோம். பெரிய நாடு, சிறிய நாடு என்று எதுவும் இல்லை. மூன்றுமே சமம் தான். நாங்கள் தயாராக இருக்கிறோம். மற்ற இரண்டு தரப்பும் தயாரானால் நாம் இதுபற்றி விவாதிக்கலாம்," என்று ஷெரிங் கூறினார்.

பூடானும் சீனாவும் ஓரிரு சந்திப்பில் சில எல்லைகளை வரையறுக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். 1984 ஆம் ஆண்டிலிருந்து இரு நாடுகளும் எல்லைப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. பூடான் எல்லைக்குள் சீன ஊடுருவல் எதுவும் இல்லை என்றும் ஷெரிங் கூறினார்.

ஷெரிங்கின் கருத்துக்கள் இந்தியாவில், குறிப்பாக ஊடகங்களில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா, பூடான் மற்றும் சீனாவுக்கு இடையேயான 'முக்கோண சந்திப்பு' பரிமாற்ற ஒப்பந்தத்தின் சாத்தியக்கூறுகள் குறித்து பல அரசியல் விமர்சகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



டோக்லாம் மீதான அதன் உரிமை கோரல்களுக்கு திம்பு போதுமான அளவு அழுத்தம் கொடுக்கவில்லை என்றும் அவர்களில் சிலர் குறிப்பிடுகின்றனர்.

**சீன எல்லையில் இந்திய ராணுவம்**

“இந்தியாவிற்கு இடையூறு ஏற்படுத்துவதற்காகவே, எல்லை பிரச்சனையை தீர்க்குமாறு சீனா பூடானுக்கு அழுத்தம் கொடுப்பதாக இந்தியா கவலை கொண்டுள்ளது," என்று இந்தியாவின் முன்னாள் மூத்த தூதரக அதிகாரியும், இமயமலை விவகாரங்களில் நிபுணராக விளங்குபவருமான பி ஸ்டோப்டன் கூறினார்.

“பூடானியர்கள் தங்கள் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்த விரும்புகிறார்கள் என்று தெளிவாகிறது. மேலும் தாவாவை தீர்ப்பதில் சீனாவின் பங்கு குறித்து பூடானின் நிலைப்பாட்டில் சமீபத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன" என்று ஸ்டோப்டன் தெரிவித்தார்.

இந்திய ஊடகங்களில் ஏற்பட்ட கொந்தளிப்பைத் தொடர்ந்து, பூடான் பிரதமர் ஷெரிங் இந்த மாத தொடக்கத்தில் தனது கருத்துக்களை தெளிவுபடுத்தினார்.

“நான் புதிதாக எதுவும் சொல்லவில்லை. பூடானின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை" என்று பூடானின் ஒரு வார இதழிடம் அவர் கூறினார்.

ஷெரிங்கின் கருத்துக்களுக்கு இந்திய ஊடகங்களின் எதிர்வினை பல பூடானியர்களுக்கு வியப்பை அளித்தது. திம்பு டெல்லியின் ஆதரவு இல்லாமல் ஒரு ஒப்பந்தத்தை எட்டப்போராடும் என்பது சீனாவின் பார்வை.

“இந்தியாதான் இங்கு தடையாக இருக்கிறது. சீனாவும் பூடானும் எல்லைப் பிரச்சனையைத் தீர்த்தால், இந்தியா மட்டுமே எஞ்சியிருக்கும். இதை இந்தியா அனுமதிக்காது என்று நான் நினைக்கிறேன்," என்று ஷாங்காய் இன்ஸ்டிடியூட் பார் இன்டர்நேஷனல் ஸ்டடீஸின் மூத்த உறுப்பினர் லியு சோங்கி கூறினார்.

சீனாவும் பூடானும் 1996 ஆம் ஆண்டு இறுதி ஒப்பந்தத்தை எட்டுவதற்கு நெருக்கமாக இருந்தன, ஆனால் இந்தியாவின் தலையீட்டால் இது தோல்வியடைந்தது என்றார் அவர்.

பூடான்- சீனா எல்லைப் பிரச்னைகள், பல தசாப்தங்களாக நிலவும் இந்தியா- சீனா எல்லை பதற்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இரு நாடுகளும் முழுமையாக வரையறுக்கப்படாத ஒரு எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

மேலும் பிராந்திய உரிமைகோரல்கள் பரஸ்பரம் எழுப்பப்படுகின்றன. 3,488 கிமீ நீள எல்லை பிரச்சனை என்று இந்தியா சொல்கிறது ஆனால், சுமார் 2,000 கிமீ பிரச்னை என்று சீனா கூறுகிறது.

நடைமுறை எல்லை இந்தியாவின் வடக்கு லடாக் பகுதியில் தொடங்கி கிழக்கில் அருணாச்சல பிரதேச (சீனர்கள் தெற்கு திபெத் என்று அழைக்கிறார்கள்) மாநிலம் வரை செல்கிறது.

சீனாவின் வளர்ந்து வரும் பொருளாதார மற்றும் ராணுவ வலிமையை பல பூடானியர்கள் கூர்ந்து கவனித்து வருகின்றனர். விரைவில் பெய்ஜிங்குடன் ஒரு ஒப்பந்தத்தை எட்டுவது நாட்டிற்கு நல்லது என்று அவர்கள் கருதுகின்றனர்.




“சீனா ஒரு நிஜம். சீனாவுடன் தூதரக உறவுகளை வைத்துக் கொள்ளாத மாற்று வழி பூடானுக்கு இருக்கிறதா? அது விரும்பத்தக்க ஏற்பாடு என்று நான் நினைக்கவில்லை," என்று பெயர் குறிப்பிடவிரும்பாத பூடான் நிபுணர் ஒருவர் கூறினார்.

இந்தியாவும் பூடானும் 1949 இல் ஒரு சிறப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இது டெல்லியின் பாதுகாப்பு கவலைகளை கணக்கில் எடுத்துக் கொண்டது. 2007 இல் திருத்தப்பட்ட ஒப்பந்தம், வெளியுறவுக் கொள்கை மற்றும் ராணுவ கொள்முதல் துறைகளில் திம்புவுக்கு அதிக சுதந்திரம் அளித்தது.

பூடானுக்குள் நூற்றுக்கணக்கான இந்திய வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் பூடான் துருப்புக்களுக்கு பயிற்சி அளிப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதன் ராணுவ தலைமையகம் டோக்லாமில் இருந்து 20 கிமீ தொலைவில் உள்ள மேற்கு நகரமான ஹாவில் உள்ளது.

பூடான் டோக்லாமை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற டெல்லியின் வலியுறுத்தல் இல்லையென்றால், பூடான் சீனாவுடன் எல்லைத் தீர்வை அடைய முடியும் என்று வாங்சா சாங்கே போன்ற பூடான் வர்ணனையாளர்கள், கருதுகின்றனர்.

'டோக்லாம் மீது நாங்கள் எப்படி உரிமை கோருவது? டோக்லாமின் ஒரு பகுதியாக இப்போது எங்களிடம் இருப்பது இப்போதும் எங்களிடம் உள்ளது. எங்களிடம் இல்லாததை சீனாவிடமிருந்து எடுக்க முடியாது," என்று அவர் கூறினார்.

பூடான் தற்போது அதன் பெரும்பாலான தேவைகளுக்காக குறிப்பாக எண்ணெய்க்காக, இந்தியாவை சார்ந்துள்ளது. திம்பு அதன் வடக்கு அண்டை நாடான சீனாவுடன் மற்றொரு வழியைத் திறப்பதன் மூலம் தன் விநியோகத்தைப் பன்முகப்படுத்த வேண்டும் என்று சாங்கே போன்ற ஆய்வாளர்கள் வாதிடுகின்றனர்.

பூடான் பிரதமரின் கருத்துக்கள் இந்தியாவின் வெளியுறவு அமைச்சகத்தின் எச்சரிக்கையான பதிலைப் பெற்றன. “இந்தியாவும் பூடானும் நெருங்கிய தொடர்பில் உள்ளன. பாதுகாப்பு நலன்கள் உட்பட பகிரப்பட்ட தேசிய நலன்கள் தொடர்பான நெருக்கமான ஒருங்கிணைப்புடன் உள்ளன" என்று இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செயலர் வினய் மோகன் குவாத்ரா ஏப்ரல் தொடக்கத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

“முச்சந்தி ஜடோக்லாம்ஸ எல்லைப் புள்ளிகளை நிர்ணயிப்பதில் எங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தும் எங்கள் முந்தைய அறிக்கைகளை மீண்டும் வலியுறுத்துகிறேன்," என்று குவாத்ரா கூறினார்.

டோக்லாமின் பெரும் பாதுகாப்பு முக்கியத்துவம் காரணமாக அதைச் சுற்றி எந்த பெரிய மறுசீரமைப்பையும் இந்தியா விரும்பவில்லை. மறுபுறம் தனது கோரிக்கையை கைவிடுமாறு பெய்ஜிங் மீது அழுத்தம் கொடுப்பது பூடான் போன்ற ஒரு நாட்டிற்கு கடினமாக இருக்கலாம்.

ஆசிய நூற்றாண்டு பற்றி மக்கள் பேசும் இந்த நேரத்தில் உலகின் வளர்ந்து வரும் இரண்டு பெரிய பொருளாதாரங்களுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சிறந்த நிலையில் பூடான் இருக்கலாம். ஆனால் டெல்லிக்கும் பெய்ஜிங்கிற்கும் இடையே பதற்றம் நீடிப்பதால், திம்பு மேலும் மேலும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் தன்னைக் காண்கிறது என்பதையும் மறுக்கமுடியாது. (பிபிசி)

# மழையில் நனைந்து... வெயிலில் காயும்...! சலவை தொழிலாளர்கள்!

சு. ராஜேஸ்கரன்

இலங்கையில் அதிகம் பேசப்படாத கதைகளில் ஒன்று சாதி. இந்தக் காலத்திலும் சாதிப்பாகுபாடு பார்க்கப்படுகிறதா? என்றால் ஆம் நிச்சயமாகப் பார்க்கப்படுகிறது. நமது நாடு பல்லின கலாசாரங்களை கொண்டது. இங்கு சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை சாதிக்கட்டமைப்பு வடக்கில் யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் மத்தியிலும், மத்தியில் கண்டிச் சிங்களவர்கள் மத்தியிலும் பெரும் கட்டமைப்பாக இப்போதும் நீறு பூத்த நெருப்பாகக் காணப்படுகிறது. இப்படி பல பகுதிகளிலும் காணப்படும் சாதியத்தின் தாக்கம், சமூக மற்றும் சமாதானப் பன்மைத்துவத்தை நாட்டின் பல பகுதிகளிலும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சாதிப்பாகுபாடு காரணமாக புறந்தள்ளி வைக்கப்படும் மக்கள் குழுமம் விளிம்புநிலை மக்களாக எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார சவால்கள் எண்ணிலடங்காதவை.

இயந்திரமயங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் உலகத்தில், இலங்கை முழுவதும் சாதியக் கட்டமைப்பினால் சீர்குலைந்துபோன சலவைத் தொழிலாளர்களின் குடும்பங்கள் சமூக, பொருளாதார ரீதியில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ஆராய்ந்து மாற்றமொன்றை நோக்கிய எதிர்காலத்திற்காக அவர்களை அழைத்துச் செல்வதன் அவசியம் குறித்து ஆராயத் தலைப்பட்டோம்.

வவுனியாவில் உடையை மினுக்கும் (அயன்) செய்யும் தங்கமணி, “சாதி பார்க்காதது போல வெளியில் காட்டிக் கொண்டாலும், சாதியை வைத்து நிழல் யுத்தம் ஒன்று நடந்துகொண்டுதான் இருக்கு” என்று ஆதங்கப்பட்டார் முள்ளியவளை - தண்ணீரூற்று பகுதியில் சலவை தொழிலகம் ஒன்றை நடத்திவரும் செல்வராசா மயூரன்.

இலங்கையின் சாதிய கட்டமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகளால் தொழில்ரீதியாக ஒதுக்கப்பட்டவர்கள், தங்களைத் தாங்களே ஒதுக்கிக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளமையும் நலிவடைந்த அந்த சமூகங்கள் மீதான மேட்டுக்குடியினரின் ஆதிக்கத்தின் ஓர் அடிகோல்தான்.

ஒருபுறம் சமூகத்தாலும் மறுபுறம் பொருளாதாரத்தாலும் நசுக்கப்படும் அந்த விளிம்புநிலை மக்களின் கதைகளைத் தேடிய பயணத்தில் பல்வேறுபட்ட தகவல்களை அறிய முடிந்தது.

“சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் வாழும் கிராமம் என்பதாலேயே 40 வருடங்களுக்கு மேலாக எமது வீதி இன்றுவரை திருத்தப்படவில்லை” என்கின்றனர் மட்டக்களப்பு -கொக்கட்டிச்சோலையில் வசிக்கும் சலவைத் தொழிலாளர் சமூகத்தினர்.

“சாவு வீட்டுக்கு வந்தால் 500 ரூபாய் காசு தருவினம். ஆனால், எங்கட வீட்டில சாப்பிட மாட்டினம். நாங்களும் அவர்கள் போல சட்டி, பானையில்தான் சமைக்கிறம்” - என கவலை வெளியிடுகிறார் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த 70 வயதுடைய வயோதிபப் பெண் கண்மணி தேவராசா.

ஆடை அழுத்தி பிரதான மூலாதாரமாகிப்போன அவர்களின் வாழ்க்கை வெளித்தெரியாத இத்தகைய சமூக ஒடுக்குமுறைகளால் நசுங்கிப்போயுள்ளது. “எனது பிள்ளை உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றபோதும் சாதிப்பாகுபாடு காரணமாக ஓரங்கட்டப்பட்டார். இந்த ஊர் மக்கள் எங்களுக்குத் துரோகம் செய்துவிட்டனர்” என்கிறார் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த திலகவதி வரதராஜன். அவர் மனதில் சமகால பொருளாதார சுமையையும் தாண்டிய பெரும் சுமையொன்று ஒட்டியிருப்பதை நாம் கண்டுகொண்டோம்.

கண்டியில் பெரும்பாலான சலவைத் தொழிலாளர்கள் வசித்து வருகிறார்கள். கண்டி - தெய்யன்னேவல பகுதியில் தனிமையில் வசித்து வரும் சலவைத் தொழிலாளியான 72 வயதுடைய வி. எஸ். மூர்த்தி சந்தர்ப்ப சூழ்நிலையால்தான் இந்தத் தொழிலுக்கு தான் நுழைய வேண்டி ஏற்பட்டது என்கிறார். ஆரம்ப கால கட்டத்தில் இதனால் கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருந்தது என்றும் தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடியால் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது எனவும் சொல்கிறார்.

ஒரு நாள் சாப்பாட்டுக்குக்கூட வருமானம் போதுமானதாக இல்லை என்றும், நாட்டில் நாளாந்தம் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவதால் மக்கள் வாழ முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுவிடும் என்றும் மூர்த்தி தெரிவிக்கிறார்.

தவிர, ‘சாதி அடிப்படையில் சலவைத் தொழிலாளர்களாக நாங்கள் இருக்கின்றோமா என்பது எனக்குத் தெரியாது. எனது தந்தையும் தாயும் இந்தத் தொழிலைத்தான் செய்தார்கள். நானும் அவர்கள் வழியைப் பின்பற்றி சலவைத் தொழிலாளியாக காலத்தை கடத்தி வருகின்றேன். அரசாங்க உதவித் திட்டங்களோ, அரசியல்வாதிகள் மூலமான உதவிகளோ எதுவும் கிடைப்பதில்லை. சமுர்த்தி பதிவும் இல்லை, வீடும் இல்லை, யாரும் இல்லை’ என்று கூறியபடி மாலை நேர வழிபாட்டுக்கான ஆயத்தங்களில் இறங்கினார் வெங்கடாச்சலம் மூர்த்தி.

‘தாம் இத்தொழிலைச் செய்வதில் தங்கள் பிள்ளைகளுக்குத் துளியவும் விருப்பமில்லை என்று கூறும் தன்னை அடையாளப்படுத்த விரும்பாத கண்டியில் வசிக்கும் பெண்ணொருவர், இந்தத் தொழிலையும் கைவிட்டு விட்டு எவ்வாறு வாழ்க்கையை கொண்டு நடத்துவது என்ற அச்சத்தால் சலவைத் தொழிலை செய்து வருகிறோம்’ என்கிறார்.

பாடசாலைக்கு செல்லும் தம் பிள்ளைகள் இத்தொழிலை நிறுத்தி வேறு தொழில்களைச் செய்வதற்கு அழுத்தம் கொடுத்துவருவதால் தமக்கு சலவைத் தொழில் மீது விருப்பம் இல்லை என்றும் அவர் கவலையோடு தெரிவிக்கிறார்.

கண்டி இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள பிரதான நகரமாகும். அவ்வப்போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் இவர்கள், கொரோனாவால் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து தாம் மீள்வதற்கு முன்பதாக சமகாலப் பொருளாதாரத் தாக்கம் வந்துவிட்டதாகவும் தெரிவிக்கின்றனர். ‘சலவை செய்வதற்காக வாங்கி வைத்திருந்த இயந்திரம் வீட்டுக்குள் புகுந்த ஆள் உயர வெள்ளத்தில் சிக்கி பழுதடைந்து விட்டது’ என்று கூறிய அந்தப் பெண் தாம் திட்டமிட்டு சமுர்த்தித் திட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

கண்டி மாநகர சபையின் முன்னாள் தினக்கூலிப் பணியாளரான நாகலிங்கம் பாபு, தனது தந்தை தொழில் செய்த ஆடை அழுத்தியை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஒருவர் என்பதுடன் அதன் பெறுமதி ‘தங்கத்துக்கு நிகர்’ என்றும் கூறுகிறார்.

கைபிடி இன்றி நீண்ட காலத்திற்கு முன்பே பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டபோதும் நாகலிங்கத்தின் குடும்ப சொத்தாக - தமது பரம்பரையின் குறியீடாக அந்த ஆடை அழுத்தியை பேணிப் பாதுகாத்து வருவதை பாபு குடும்பத்தினர் வெளிப்படுத்தினர்.

கண்டியைச் சேர்ந்த 60 வயதுடைய விஜயலக்ஷ்மி சரவணன் என்ற பெண், கணவன் உயிரிழந்த நிலையில் தனது மகள் மற்றும் மருமகன், பேரப்பிள்ளைகளுடன் வசித்து வருகிறார். கணவன் உயிரிழந்த நிலையில் வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறார் விஜயலக்ஷ்மி சரவணன். தனது வருமானத்துக்காகவும் பரம்பரை தொழில் என்ற அடிப்படையிலும் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வரும் இவரின் குடும்பத்திலும் இவருக்குப் பின்னர் யாரும் சலவைத் தொழிலில் ஈடுபடவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கண்டியிலுள்ள சலவைத் தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் பக்கியவத்தயை (துணி துவைக்கும் இடத்தை) காண்பித்த 70 வயதுடைய சம்பங்கி சஞ்சித்குமார என்ற முதியவர், ‘தமது உழைப்பும் தொழில் உரிமையும் இவ்வாறுதான் சுரண்டப்படுகின்றது’ என்பதை ஆதங்கத்துடன் வெளிப்படுத்தினார்.

‘ஆரம்ப காலத்தில் சலவைத் தொழிலாளர்கள் மட்டும் வாழ்ந்து வந்த பகுதியில் தற்போது நாங்கள் தொழில் செய்ய முடியாதவாறு ஆக்கிரமிப்புக்கள் அதிகரித்து விட்டன. பல இடங்கள் மாற்றி எம்மை இங்கு கொண்டுவந்து விட்டுள்ள போதிலும் இங்கு தொழில் செய்யவும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இயற்கையாக கிடைத்த நீரில் தேவைக்கு ஏற்ற அளவில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த எம்மை ஓர் இடத்தில் தொட்டி அமைத்து குழாய் மூலம் நீர் தந்து அதற்கு கட்டணம் அறவிட்டு எமது வருமானம் பெருமளவில் சுரண்டப்படுகின்றது’ என்றும் அவர் கூறினார்.

‘எங்களுடன் சலவைத் தொழில் காணாமல் போய்விடும். சிங்களவர்களின் ஆக்கிரமிப்பு மட்டுமின்றி தனியார் நிறுவனங்களாலும் எமது தொழில் நிலம் அபகரிக்கப்பட்டு வருகின்றது. எங்களுடன் எல்லாம் முடிந்து விட்டது’ என்கிறார் சம்பங்கி சஞ்சித்குமார.

சலவைத் தொழிலாளியான மோகனகுமார் என்பவரை திருமணம் செய்ததால் அவரின் தாய், தந்தை, சகோதரர்களால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்ட அங்கம்மா வவுனியா நெளுக்குளத்தில் சலவை தொழிலகம் ஒன்றை நடத்தி வருகிறார். ‘தாய், தந்தை, சகோதரர்கள் என்னைப் புறக்கணித்தபோதும் கணவன் மோகனகுமார் சிறந்த ஒரு வாழ்க்கைத் துணையாக இருந்தார்’ எனக் குறிப்பிடும் அங்கம்மா யாழ்ப்பாணத்தில் பிறந்த ஓர்உயர்சாதிப் பெண்ணாவார். தனது வீட்டுக்கு தொழில் நிமித்தம் ஆடை பெற்றுக்கொள்ள வந்த தனது கணவரில் காதல் கொண்டதால் பல எதிர்ப்புகளுக்கு முகம்கொடுத்ததாகவும், சாதியக் கட்டமைப்பு என்பது ஆழமான ஒரு வேர் போன்றது என்றும் அங்கம்மா குறிப்பிடுகிறார்.

வவுனியா நெளுக்குளம் நாலாம் கட்டைப் பகுதியில் வசித்து வரும் சலவைத் தொழிலாளியான 61 வயது தங்கமணி பஞ்சலிங்கம் என்ற வயோதிபப் பெண், வறுமையோடும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள தனது மகனின் விடுதலைக்காகவும் போராடி வருவதை அறிந்து கொள்ள முடிந்தது.

‘எனது மகனை விடுதலை செய்வதற்காக போராடி வருகின்றேன். அவரை சென்று பார்ப்பதற்கு எனது வருமானம் அனைத்தையும் செலவு செய்கின்றேன். எனக்கும் உடல்நிலை சரியில்லை. எனது சலவைத் தொழிலில் சில வேளை சிறுதொகை வருமானம் கிடைக்கும் சிலவேளை ஒன்றும் கிடைக்காமலும் போகும். நாட்டின் பொருளாதார நெருக்கடி எமக்கு அதிக சுமைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் காதில் இருந்த தோட்டை அடகு வைத்து மகனுக்கு 7000 ரூபாய் பணம் அனுப்பி வைத்தேன். யாருடைய உதவியும் இன்றி தனிமையில் தவித்து வருகின்றேன்’ என்கிறார் அந்தத் தாய்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சந்தி இரணைப்பாலை வீதியில் தனது 3 பிள்ளைகளுடன் வசித்துவரும் நிலையில் சலவைத்தொழிலாளியான 42 வயதுடைய கந்தசாமி வசீகரன் சலவைத் தொழிலில் போதிய வருமானம் இன்மையாலும், தனது பிள்ளைகள் சலவைத் தொழிலில் ஈடுபடுவதை விரும்பாததாலும் இத்தொழிலிருந்து விலக முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

‘பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்கு வருமானம் போதுமானதாக இல்லை. தகுதிக்கேற்ற தொழிலை செய்ய வேண்டும் என்றே விரும்புகின்றேன்’ என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

‘மின்சாரக் கட்டணம் என்பது முன்பு எப்போதும் இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. இது அரசாங்கம் எடுத்த முடிவு. நாம் இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். மக்கள் எங்களைத் திட்டித்தீர்க்கின்றனர்’ என்றார் இலங்கை மின்சார சபை பொறியியலாளர் ஒருவர். (அவரின் வேண்டுகோளின் பேரில் அவரின் அடையாளங்கள் மறைக்கப்பட்டுள்ளன.).

‘கட்டண அதிகரிப்பு குறித்தோ, குறைப்பு குறித்தோ நாங்கள் முடிவு செய்ய முடியாது. கொழும்பில் எடுக்கப்படும் முடிவுக்கு ஏற்ப செயல்பட வேண்டியுள்ளது. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளபோதும் இணைப்பு துண்டிப்பு வீதத்தில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. மின்சாரக் கட்டணத்தைப் பார்த்து மக்கள் எங்களைத் திட்டினாலும் உரிய கட்டணத்தை செலுத்துகின்றனர். முன்பு நிலுவைப் பணத்தை செலுத்துவதற்கான கால அவகாசம் அதிகமாக இருந்தது. ஆனால் இப்போது ஒரு மாதம் தான் வழங்கப்படுகின்றது. இருப்பினும், மின் இணைப்பு துண்டிப்பை மக்கள் தவிர்த்து வருகின்றனர். மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதால் (சலவைத் தொழிலாளர்கள் உட்பட) சிறு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பின் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவில் முறையிட முடியும். எங்களால் அரசாங்கத்தின் கொள்கை முடிவுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது. மின் இணைப்புக்களில் ஏதும் கோளாறு ஏற்பட்டால் அதனைத் திருத்திக் கொடுப்பது, மின்சாரக் கட்டணத்தை அறவிடுவது, இதனைத் தவிர எங்களால் எதுவும் செய்ய முடியாது’ என்கிறார் பொறியியலாளர்.

இதேவேளை சலவைத்தொழிலாளர்கள் மாத்திரமின்றி சாதியத்தின் பெயரில் பாதிக்கப்படும் அனைத்துத் தரப்பினர் குறித்தும் எம்மோடு பேசிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும், பொருளியல் மற்றும் சமூக ஆய்வாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமர், சாதிக்கு எதிராக மக்கள் போராட்டங்கள் தேவை என்றும், சாதிக்கட்டமைப்பு பற்றி வெளிப்படையாக விவாதிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கின்றார்...

சமூகத்தில் விளிம்புநிலை மக்கள் குழுமமாகக் காணப்படும் சலவைத் தொழிலாளர்களின் சமூக அந்தஸ்தும், பொருளாதாரமும் கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில், அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் நலிவடைந்த இக்குழுமத்தினரின் பொருளாதாரப் பிரச்னைகளும் தீர்த்து வைக்கப்படவேண்டியது அவசியம். சலவைத் தொழிலாளர்களும் மனிதர்களே. அவர்களைத் தொழில் அடிப்படையில் பாகுபாடுகள் பார்த்து புறக்கணிப்பது நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு பாகுபாடு பார்க்கப்படும் சந்தர்ப்பங்களில் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு சாதி வெறியர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன், இந்தத் தலைமுறையுடன் சலவைத் தொழிலை கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள குடும்பங்கள் தொடர்பில் உரிய கணக்கெடுப்புக்களை மேற்கொண்டு வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதும் பாதிக்கப்பட்ட மக்களினதும், சமூக ஆர்வலர்கள் மற்றும் புத்திஜீவிகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

# தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டதால் நாங்கள் தப்பித்துக் கொண்டோம்!

## சுதந்திரக் கட்சி தலைவர் மைத்திரி

கண்டி, மே 02

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாம் தவறிழைத்து விட்டோம். எவ்வாறிருப்பினும் தெய்வாதீனமாக இம்முறை தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டுள்ளமையால் நாம் தப்பித்துக் கொண்டோம். எனவே எவரது தயவும் இன்றி எம்மால் ஆட்சியமைக்க முடியும். எவருக்கேனும் எமது தயவு வேண்டுமானால் அவர்கள் எம்முடன் இணையலாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஆசிய நாடுகளைப் பின்பற்றி , ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்று முன்னேறும் வழி குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டை பிளவுபடுத்தாத , இறையாண்மைக்குள் தலையிடாத சர்வதேச ஒத்துழைப்புக்கள் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் திங்கட்கிழமை இடம்பெற்ற சுதந்திர கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

அடுத்து ஆட்சியமைப்பதற்கான பல்வேறு கொள்கைகள் எம்மால் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை அடுத்து ஆட்சியமைப்பது சிறீ லங்கா சுதந்திர கட்சியாகவே இருக்கும். அவ்வாறில்லை எனில், எமது ஆதரவின்றி எந்தவொரு தலைவராலும் ஆட்சியமைக்க முடியாது.

அனைத்து இன மக்கள் மத்தியிலும் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒற்றுமையின் ஊடாகவே இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக்க முடியும். மாறாக இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவது முட்டாள்தனமான செயல்பாடாகும்.

இந்தியா, ஜப்பான், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளைப் பின்பற்றி நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்கு ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாட்டை பிளவுபடுத்தாத , இறையாண்மையில் தலையிடாத சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு எமக்கு மிக அவசியமாகும்.

நாட்டில் நீதியையும் அமைதியையும் நிலைநாட்டும் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். எனவே சிறீ லங்கா சுதந்திர கட்சியால் மாத்திரமே நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். இனியொருபோதும் சுதந்திர கட்சி அதன் தனித்துவத்தன்மையை விட்டுக் கொடுத்து , எந்தவொரு கட்சியின் பின்னாலும் செல்லாது - என்றார். (ஐ)

# தொழிலாளர் உரிமையை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு இடமே இல்லை!

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, மே 02

மே தினத்துக்கு பின்னர் புதிய இலக்கு நோக்கி அனைவரும் செயல்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பொரள்ளை கெம்பல் மைதானத்தில் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆளும் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஆட்சியில் இருந்தபோதும், எதிர்க்கட்சியில் இருந்த போதும் உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாத்துள்ளோம். வெற்றியை காட்டிலும், தோல்வியின் போது உழைக்கும் மக்கள் எமக்கு ஆதரவளித்துள்ளார்கள்.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம். நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நாட்டில் தற்போது ஜனநாயகம் மற்றும் சட்டம், ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஜனநாயகத்துக்கு அமையவே சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும்.

மே தினத்துக்கு பின்னர் புதிய இலக்கு நோக்கி அனைவரும் செயல்பட வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் சட்டமூலங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை. உழைக்கும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க என்றும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார்.

(ஐ)

# வடக்கில் 118,000 பேருக்கு காணிகள் வழங்க திட்டம்!

## இறுதிக்கட்டத்தில் பணிகள்

யாழ்ப்பாணம், மே 02

வடக்கு மாகாணத்தில் காணி அற்ற, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு அரச காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வட மாகாணத்தில் காணி அற்ற வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கான நன்கொடை காணிகள் வழங்கும் செயல்பாடுகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இதேபோன்று காணி அற்ற அரச உத்தியோகத்தர்களுக்கும் குத்தகைக்கு மற்றும் வீடுகளை கட்டுவதற்கு காணிகள் வழங்கும் செயல் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

மாகாணத்தில் சுமார் 4 இலட்சம் மரங்கள் ஒவ்வொன்றுக்கும் 1:5 என்ற விகிதத்தில் மரங்களை நாட்டுவதற்கு புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது வழங்கப்படும் காணி துண்டுகளில் ஏற்கனவே உள்ள பயன் தரும் மரங்கள் அல்லது காணி துண்டுகளில் நடுகை செய்யும் பயன்தரும் மரங்களுக்கான இலவச ஆலோசனைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக மாகாண அமைச்சுக்களின் அதிகாரிகள் உள்ளூர் ஆட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச குழுக்கள் இணைந்து பணியாற்றுவதற்கான செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதன் மூலம் மாகாணத்தில் உள்ள ஒவ்வோர் ஏழைக் குடும்பமும் ஒரு பரப்பு (10 பேர்ச்) அரச காணிக்கு உரிமையாளராக மாறுகின்ற நிலையில் அவர்களுக்கான பயன் தரும் மரங்களை அவர்களே அறுவடை செய்யும் உரிமம் வழங்கப்படும்- என்றும் ஆளுநர் கூறினார். (ஐ)







# திருமலை விபத்தில் இருவர் உயிரிழப்பு!

## ஒருவர் படுகாயம்

திருமலை, மே. 02

**ஹொரவப்பொத்தானை -கெப்பிற்றிக்கொல்லாவ பிரதான வீதி கிவுளேகட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும் மற்றும் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.**

இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு 10.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் இருந்து காரொன்று ஹொரவப்பொத்தானை நோக்கி வந்துகொண்டிருந்த போது மாட்டுடன் மோதி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இதன்போது குறித்த காரில் பயணித்த மூவரில் ஒருவர் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்தார் எனவும் மற்றைய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஹொரவப்பொத்தானை- அழுத்வத்த- மரதன்கடவல பகுதியைச் சேர்ந்த முனசிங்கதே ரோமின்த மதுபாசன (வயது-22) மற்றும் ஹொரவப்பொத்தானை-நிக்கவெவ சந்தியில் வசித்து வரும் ரன்னஹென்னகே சதறு பிரபாஷன (வயது-19) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை குறித்த விபத்தில் படுகாயமடைந்த திரப்பன்கடவல பகுதியைச் சேர்ந்த நேரத் முதியன்சலாகே துஷாந்த உதயங்க பண்டார (வயது-30) படுகாயமடைந்து நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் தற்போது ஹொரவப்பொத்தானை மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

# மனைவிக்கு இன்சுலின் ஊசி போட்டு கொல்ல முயன்ற மருத்துவர் கைது!

திருமலை, மே. 02

தனது மனைவிக்கு இன்சுலின் ஊசியை பலவந்தமாக செலுத்தி கொலை செய்ய முயன்றதாக கூறப்படும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரை பம்பலப்பிட்டி பொலிஸ் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அதிகளவு இன்சுலின் ஊசி மூலம் மயக்கமடைந்த பெண், ஆபத்தான நிலையில் களுபோவில வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருமணமாகி சில காலம் குழந்தை பேறு இல்லாத காரணத்தால் மனைவி, மருத்துவரிடம் அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரான வைத்தியர், அடிக்கடி தகராறு செய்யும் தமது மனைவியைக் கொல்லும் நோக்கில் இவ்வாறு செயற்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மேலும், உடலில் சர்க்கரை அளவைக் குறைக்க மனைவியின் உடலில் இன்சுலின் ஊசியை வலுக்கட்டாயமாகச் செலுத்தி அவரை கொல்ல முயன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மயக்கமடைந்த மனைவி பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைய, சந்தேகநபரான வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# சுகாதார சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் கூம்பு தயாரித்த தொழிற்சாலை சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு, மே. 02

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி, மனித பாவனைக்கு உதவாத வகையில் ஐஸ்கிறீம் கூம்பு தயாரித்த தொழிற்சாலையொன்றை சுகாதார அதிகாரிகள் சுற்றிவளைத்தனர். இச்சம்பவம் மட்டக்களப்பு நகரில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு நகரில் சுகாதார மற்ற முறையில் இத்தொழிற்சாலையில் ஐஸ்கிறீம் கூம்புகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவது தொடர்பாக சுகாதார அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணனின் பணிப்புரையின் கீழ் மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி வைத்தியர் எம்.மாதவனின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து கிழக்கு பல்கலைகழக மருத்துவ பீட மாணவர்களும் இச்சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

குறித்த தொழிற்சாலை உரிமையாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# வளத்தாப்பிட்டி அ.த.க பாடசாலையின் 55வருட நிறைவு கலாசார நடைபவனி!

அக்கரைப்பற்று, மே. 02

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி அ.த.க பாடசாலையின் 55 ஆண்டு நிறைவினை ஒட்டி இடம்பெற்ற நடைபவனியும் கலாசார விளையாட்டு விழாவும் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் ஆர்.தர்சனாத் தலைமையில் இடம்பெற்றது.

கலாசார நடைபவனியின்போது நடனங்கள் மற்றும் பலவித நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சம்மாந்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர்.ஏ.எல்.அப்துல் மஜித், நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப.பரமதயாளன் மற்றும் பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள் ஆசிரியர்கள் தற்போது கடமைபுரியும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன்விரும்



பிகள் என அதிகளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

அதிதிகளுக்கு பழைய மாணவர்களால் நினைவு சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (அ)

# விஷ்ணு ஆலயத்திற்கு வெண்கலச் சிலைகள்



அக்கரைப்பற்று, மே. 02

அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தை திருவள்ளுவர் புரம் அருள்மிகு மகாவிஷ்ணு ஆலய கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு பாமா ருக்மணி சமேத விஷ்ணு வெண்கலச் சிலைகள் எழுந்தருளிக்காக அன்பளிப்பு செய்யப்பட்டது.

ஆலய நிர்வாகம் கல்முனை சொர்ணம் குழுமங்களின் ஸ்தாபக தலைவர் எம். விஸ்வநாதனிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க , அச் சிலைகளை இந்தியாவிலிருந்து தருவித்து அவரே நேற்று நேரில் சென்று கையளித்தார்.

சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான இம்மூன்று சிலைகளையும், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரா கிருபேந்திர சர்மா மற்றும் ஆலயத்தலைவர் கணபதிப்பிள்ளை பாக்கியராசா ஆகியோரிடம் சொர்ணம் விஸ்வநாதன் ஆலய சந்நிதியில் வைத்து கையளித்தார்.

அச்சமயம் கல்முனை சொர்ணம் நகைமாளிகை முகாமையாளர் கோ.குணபாலச்சந்திரன், இந்துசமய ஆர்வலர்களான காத்தவராயன், அழகுராஜா, சசிகுமார் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

திருவள்ளுவர்புர மக்களின் அயராத உழைப்பும் ஏனைய மக்களின் ஒத்துழைப்பும் சேர்ந்து நடாத்தும் மகா கும்பாபிஷேகத்தின் வாஸ்து சாந்தி உடனான ஆரம்ப கிரியைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இரா கிருபேந்திர சர்மா தலைமையில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. இன்று செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

நாளை புதன்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மட்டக்களப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




மட்டக்களப்பு, மே. 02

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை மற்றும் குடைகள் என்பன பாடசாலையின் அதிபர்கள்கள் தலைமையில் நேற்று வழங்கக்பட்டன.

மட்க்களப்பு ரிதிதென்ன இக்ராஹ் வித்தியாலயம், கடுவத்மடு தர்மபால யூனியர் பாடசாலை, மட்டக்களப்பு புணானை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் பாடசாலையின் அதிபர்களான எஸ். விக்ரமன், எம்.எஸ்.எம். ரிஸ்மின், ஐ.பி.எஸ். என். குணசேகர மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் எல். கஜரூபன் உட்பட பல அதிகாரிகளும், பாடசாலைகளின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சூடான் பொதுமக்களின் நிலவரங்களை ஆராய்க!

## ஐ.நா பொதுச்செயலாளர் அறிவுறுத்தல்

நியூயோர்க், மே.02

**சூடானில் மோதலில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலவரங்களை ஆராயுமாறும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான தலைவரிடம் ஐ.நா பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் அறிவுறுத்தியுள்ளார்.**

நேற்று முன்தினம் நள்ளிரவுடன் முடிவடையவிருந்த 72 மணிநேர போர்நிறுத்தத்தை மேலும் நீடிப்பதாகக் கூறிய இரு தரப்பினரும் தொடர்ந்தும் போராடி வருகின்ற நிலையில் அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

சூடான் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களும் எதிர்கொள்ளும் உடனடி மற்றும் நீண்டகால விளைவுகள் குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக ஐ.நா பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை போரிடும் இரண்டு தரப்பும் பொதுமக்கள் மற்றும் உள்கட்டமைப்பைப் பாதுகாக்கவும், தப்பியோடிய பொதுமக்களை பாதுகாப்பாகக் கடந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கார்ட்டூமில், மேலும் மக்கள் உணவு, தண்ணீர் மற்றும் எரிபொருளுக்கு தொடர்ந்தும் போராடிவரும் சூழலில் போக்குவரத்துச் செலவு அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் தலைவர் மார்ட்டின் கிரிபித்ஸ் கூறியுள்ளார்.

ஒரே இரவில் தலைகீழாக மாறியுள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவது எப்படி என்பதை ஆராய்வதற்காக தான் அப்பகுதிக்குச் செல்வதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஏவுகணை தாக்குதல்களை துரிதப்படுத்தியது ரஷ்யா!



கீவ், மே. 02

உக்ரைனில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 18 ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், அந்த தாக்குதல்களை முறியடித்ததாகவும், ஆயுதப்படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

இதன்படி 18 ஏவுகணைத் தாக்குதல்களில் 15 தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 2.30 மணியளவில் தாக்குதல்களை நடத்துவதற்கு "மூலோபாய விமானப் போக்குவரத்து விமானங்கள்" பயன்படுத்தப்பட்டதாகவும், வான்வழித் தாக்குதல் சைரன்கள் மூன்று மணி நேரத்திற்கும் மேலாக ஒலித்ததாகவும் ஆயுதப்படைகளின் தளபதி கூறினார்.

ரஷ்யா கடந்த சில நாட்களாக உக்ரைன் மீது ஏவுகணை தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒலிவ் மர தோட்டத்தில் பதுங்கியிருந்த ஐ. எஸ். தலைவர் கொல்லப்பட்டார்!




அங்காரா, மே. 02

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவரான அபு அல் ஹூசைன் அல் ஹூசைனி அல் குராஷியை துருக்கி உளவுப் படைகள் கொன்றுவிட்டதாக துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் அறிவித்துள்ளார்.

துருக்கிய உளவுத்துறையினர் ஐ.எஸ்.ஐ.எஸ் குழுவின் தலைவர் என்று கூறப்படுபவரை நீண்ட காலமாக கண்காணித்து வந்ததாக எர்டோகன் கூறினார்.

"கடந்த சனிக்கிழமை சிரியாவில் துருக்கிய தேசிய புலனாய்வு அமைப்பின் நடவடிக்கையில் அந்த நபர் கொல்லப்பட்டார்" என்று எர்டோகன் ஞாயிற்றுக் கிழமை அளித்த பேட்டியில் கூறினார்.

பயங்கரவாத அமைப்புகளுடன் எவ்வித பாகுபாடும் இன்றி எமது போராட்டத்தை தொடர்வோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

துருக்கி ஆதரவு கிளர்ச்சிக் குழுக்களால் கட்டுப்படுத்தப்பட்டு, துருக்கி மற்றும் சிரியா ஆகிய இரு நாடுகளிலும் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான, வடக்கு சிரிய நகரமான ஜின்டெரெஸ் அருகே இந்தத் தாக்குதல் நடந்ததாக சிரிய உள்ளூர் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.எஸ்.ஐ.எஸ் தரப்பிலிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை. சிரிய தேசிய இராணுவம், அப்பகுதியில் பாதுகாப்பு பிரசன்னம் கொண்ட ஒரு எதிர்க்கட்சி பிரிவு, உடனடியாக எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

வடக்கு சிரியாவின் ஜின்டெரெஸ் அருகே, ஒரு இஸ்லாமிய பள்ளியாக பயன்படுத்தப்படும் கைவிடப்பட்ட பண்ணையை குறிவைத்து துருக்கியின் உளவுத்துறை முகவர்களும் உள்ளூர் இராணுவப் பொலிஸாரும் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

ஒரு குடியிருப்பாளர் ரொராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறுகையில், சனிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை ஒரே இரவில் நகரத்தின் எல்லையில் மோதல்கள் தொடங்கின.சுமார் ஒரு மணி நேரம் மோதல் நீடித்தது. ஒரு பெரிய வெடிச்சத்தம் கேட்டது-என்றார். (அ)

# அமெ.- தென் கொரிய இணக்கப்பாடு பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## வடகொரியா சுட்டிக்காட்டு

பியொங்யாங், மே. 02

அமெரிக்கா மற்றும் தென் கொரியாவிற்கு இடையே தற்போது ஏற்பட்டுள்ள இணக்கப்பாடு பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக வட கொரிய தலைவர் கிம் ஜொங் உன்னின் சகோதரி எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில், வடகொரியாவின் அணுவாயுத பலத்தை மேலும் முழுமையாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்ததாக வடகொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் அமெரிக்காவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய, அமெரிக்கா, தென் கொரிய கடல்பிராந்தியத்தில் அணுவாயுத நீர்மூழ்கிக் கப்பல்களை நிறுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

இது தவிர, வடகொரியாவினால் விடுக்கப்படும் ஆயுத அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் தென் கொரியாவின் அணுசக்தி திட்டத்திற்கு அமெரிக்கா உதவுவது குறித்தும் இணக்கப்பாடு எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யியோலிற்கும் இடையே அமெரிக்காவில் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்த இணக்கப்பாடு குறித்து தென் கொரிய தலைவர் கருத்து தெரிவிக்கையில், கொரிய நீரிணையில் அணுவாயுத நடவடிக்கைகள் அதிகரிக்கும் நிலையில், எமது நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஏற்ற நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

'வாஷிங்டன் பிரகடனம்' என பெயரிட்டுள்ள அமெரிக்க - தென் கொரிய ஒத்துழைப்பு இணக்கப்பாட்டிற்கு அமைய அமெரிக்கா, தென்கொரியாவின் பாதுகாப்பிற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 40 வருடங்களுக்குப் பின்னர் முதன் முறையாக பலம் வாய்ந்த அணுவாயுத தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய நீர் மூழ்கிக் கப்பல் உட்பட பல அணுவாயுத கப்பல்களை கொரிய குடாவிற்கு அமெரிக்கா அனுப்பும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை நிலையே எமக்கும் ஏற்படும்!

## எச்சரிக்கை விடுத்தார் இம்ரான் கான்

இஸ்லாமாபாத், மே. 02

தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாட்டில் வன்முறைப் போராட்டங்கள் வெடிக்கும் எனவும் இலங்கை போன்ற ஒரு சூழ்நிலையை பாகிஸ்தான் எதிர்கொள்ளும் என முன்னாள் பிரதமரும் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் தலைவருமான இம்ரான் கான் கூறியுள்ளார்.

"இது ஒரு எச்சரிக்கை அல்ல, இது எனது பகுப்பாய்வு; விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் இதுவரை கட்சி பேரணிகள் மற்றும் பொதுக்கூட்டங்களில் அமைதியாக இருந்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டால், அவர்கள் வீதிக்கு வருவார்கள், நிலைமையை யாராலும் கட்டுப்படுத்த முடியாது, " என முன்னாள் பிரதமர் நேற்று வீடியோ இணைப்பு மூலம் கட்சி ஊழியர்களுடன் உரையாடும் அமர்வில் குறிப்பிட்டார். (அ)

# அஸ்வின் புதிய சாதனை

மும்பை, மே 02

இந்திய அணியின் முன்னணி சுழல்பந்து வீரரான அஸ்வின் புதிய சாதனை படைத்துள்ளார்.

மும்பை அணிக்கு எதிரான போட்டியில் நேற்று முன்தினம், அஸ்வின் சிறப்பாக பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதன்மூலம் அவர் அனைத்துவிதமான இருபது - 20 போட்டிகளிலுமாக 300 விக்கெட்களை வீழ்த்தி புதிய சாதனை புரிந்தார். 300 விக்கெட் எடுத்த 2ஆவது இந்திய வீரர் அஸ்வின் ஆவார். (ஐ)




# பரபரப்பான போட்டியில் மும்பை அபார வெற்றி!

மும்பை, மே 02

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 42ஆவது லீக் போட்டியில் 213 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை விரட்டி, வெற்றி பெற்றுள்ளது மும்பை இந்தியன்ஸ் அணி.

ராஜஸ்தான் றோயல்ஸை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது மும்பை. சூர்யகுமார் யாதவ் மற்றும் ரிம் டேவிட் என இருவரும் தங்கள் அதிரடியால் மும்பைக்கு இந்த வெற்றியை தேடி தந்துள்ளனர்.

இந்தப் போட்டி வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.

இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு தொடக்கமே சறுக்கல்தான். அணித் தலைவர் ரோஹித் சர்மா 3 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் வந்த கமரூன் கிறீன், இஷான் கிஷனுடன் இணைந்து 62 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார். கிஷன் 28 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். கிறீன் 26 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

இதன் பிறகு சூர்யகுமார் யாதவ் மற்றும் திலக் வர்மா கூட்டு சேர்ந்தனர். இருவரும் 51 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். அந்த கூட்டணி மும்பை அணிக்கு அவசியமான ஒன்றாக அமைந்தது. 29 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சூர்யகுமார் ஆட்டமிழந்தார். அவரை ராஜஸ்தான் வீரர் சந்தீப் சர்மா அபாரமாக பிடியெடுத்து வெளியேற்றி இருந்தார்.

15.4 ஓவர்களில் 152 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடினார் ரிம் டேவிட். 14 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றி பெற செய்தார்.

2 பௌண்ட்ரி மற்றும் 5 சிக்ஸர்கள் இதில் அடங்கும். கடைசி ஓவரில் 17 ஓட்டங்கள் தேவைப்பட அந்த ஓவரின் முதல் மூன்று பந்தையும் சிக்ஸர் விளாசி அசத்தினார்.

ஹோல்டர் அந்த ஓவரை வீசி இருந்தார். மறுமுனையில் திலக் வர்மா 21 பந்துகளில் 29 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய வழக்கம் போலவே அந்த அணியின் தொடக்க வீரர்கள் ஜோஸ் பட்லர் மற்றும் யாஷஸ்வி ஜெய்ஸ்வால் என இருவரும் முதல் விக்கெட்டுக்காக 72 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். ஜெய்ஸ்வாலுக்கு துணையாக நின்ற பட்லர் 19 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார்.

அதன் பின்னர், துடுப்பெடுத்தாட வந்த அணித் தலைவர் சஞ்சு சாம்சன், படிக்கல், ஹோல்டர், ஹெட்மேயர், துருவ் ஜூரல் போன்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தனர்.

இருந்தும் மறுமுனையில் ஜெய்ஸ்வால் அதிரடி காட்டினார். இதன் பலனாக ஐ. பி. எல். அரங்கில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார் ஜெய்ஸ்வால். இந்த சதம் அவரின் சொந்த ஊரான மும்பை மண்ணில் பதிவு செய்தது கூடுதல் சிறப்பு.

62 பந்துகளில் 124 ஓட்டங்கள் குவித்தார். இதில் 16 பௌண்ட்ரிகள் மற்றும் 9 சிக்ஸர்கள் அடங்கும். கடைசி ஓவரின் 4ஆவது பந்தில் அவரின் விக்கெட்டை அர்ஷத் கான் கைப்பற்றினார்.

20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ராஜஸ்தான் அணி.

## ஐ. பி. எல். இருபது - 20:

# சென்னையை வீழ்த்தி பஞ்சாப் த்ரில் வெற்றி!

சென்னை, மே 02

சென்னை சுப்பர் கிங்ஸ் (சி. எஸ். கே.) அணிக்கு எதிரான போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சி. எஸ். கே. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 200 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரரான டெவன் கொன்வே 52 பந்துகளில், 16 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 92 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார். மற்றொரு தொடக்க வீரரான ருதுராஜ் கெய்க்வாட் 31 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 37 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஷிவம் துபே 17 பந்துகளில், 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 28 ஓட்டங்கள் விளாசிய நிலையில் அர்ஷ்தீப் சிங் பந்தை அடித்தாடி ஷாருக் கானிடம் பிடிகொடுத்து வெளியேறினார். மொயின் அலி 10, ரவீந்திர ஜடேஜா 12 ஓட்டங்களில் நடையை கட்டினர். இறுதி ஓவரில் களமிறங்கிய அணித் தலைவர் டோனி 2 சிக்ஸர்களை பறக்கவிட்டார். 4 பந்துகளை சந்தித்த அவர் 13 ஓட்டங்கள் சேர்த்தார்.

201 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 15 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் ஷிகர் தவான் 15 பந்துகளில், ஒரு சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 28 ஓட்டங்களில் எடுத்து துஷார் தேஷ்பாண்டே பந்தில் ஆட்டமிழந்தார். அதர்வா 13 ஓட்டங்களும் பிரப்ஷிம்ரன் சிங் 24 பந்துகளில், 2 சிக்ஸர், 4 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்களும் எடுத்த நிலையில் ஜடேஜா பந்தில் ஆட்டமிழந்தனர். லியாம் லிவிங்ஸ்டன், ஷாம் கரன் களத்தில் இருந்த நிலையில் கடைசி 5 ஓவர்களுக்கு 72 ஓட்டங்கள் தேவையாக இருந்தன.

துஷார் தேஷ்பாண்டே வீசிய 16ஆவது ஓவரில் லிவிங்ஸ்ரன் 3 சிக்ஸர்களை பறக்கவிட்டார். மேலும் உதிரியாக ஒரு பௌண்ட்ரியும் சென்றது. இந்த ஓவரின் 5ஆவது பந்தை சிக்ஸருக்கு அடிக்க முயன்று ருதுராஜ் கெய்க்வாட்டிடம் பிடி



கொடுத்து ஆட்டமிழந்தார் லிவிங்ஸ்ரன். 24 பந்துகளை சந்தித்த அவர், 4 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 40 ஓட்டங்கள் சேர்த்தார். துஷார் தேஷ்பாண்டே வீசிய இந்த ஓவரில் மட்டும் 24 ஓட்டங்கள் விளாசப்பட்டன.

ஜடேஜா வீசிய அடுத்த ஓவரில் கரண், ஜிதேஷ் சர்மா ஆகியோர் தலா ஒரு சிக்ஸரை விளாச 17 ஓட்டங்கள் கிடைத்தன. இதனால் தேவையான ஓட்ட விகிதம் வெகுவாக குறைந்தது. 3 ஓவர்களில் 31 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பத்திரண வீசிய 18ஆவது ஓவரின் முதல் பந்தில் ஷாம் கரன் போல்ட் ஆனார். ஷாம் கரன் 20 பந்துகளில், 29 ஓட்டங்கள் சேர்த்தார்.

இந்த ஓவரில் ஜிதேஷ் சர்மா பௌண்ட்ரி ஒன்றை விரட்ட 9 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன. 12 பந்துகளில் 22 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் துஷார் தேஷ்பாண்டே வீசிய இந்த ஓவரின் முதல் பந்தை பௌண்ட்ரிக்கு விரட்டிய ஜிதேஷ் சர்மா 4ஆவது பந்தில் சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார். அவர், 10 பந்துகளில் 21 ஓட்டங்கள் சேர்த்தார். இதையடுத்து களமிறங்கிய சிகந்தர் ரஸா பௌண்ட்ரி ஒன்றை அடிக்க ஆட்டத்தில் பரபரப்பு அதிகமானது.

கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பத்திரண வீசினார். முதல் இரு பந்துகளில் இரு ஓட்டங்கள் எடுக்கப்பட்ட பந்தில் 3ஆவது பந்தில் ஓட்டம் சேர்க்கப்படவில்லை. அடுத்த இரு பந்துகளிலும் தலா 2 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் தேவையாக இருந்த நிலையில் ஆட்டத்தில் பரபரப்பு மேலும் அதிகமானது. இந்த பந்தை சிகந்தர் ரஸா தட்டிவிட்டு 3 ஓட்டங்களை ஓடியே எடுக்க பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 201 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிகந்தர் ரஸா 13, ஷாருக்கான் 2 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சென்னையின் பந்துவீச்சில் துஷார் தேஷ்பாண்டே 3, ரவீந்திர ஜடேஜா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பஞ்சாப் அணிக்கு இது 5ஆவது வெற்றியாக அமைந்தது. 9 போட்டிகளில் விளையாடி உள்ள பஞ்சாப் அணி 10 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் உள்ளது. சென்னை அணி 4ஆவது தோல்வியை சந்தித்தது. 9 போட்டிகளில்விளையாடியுள்ள சென்னை 10 புள்ளிகளுடன் 4ஆவது இடத்தில் உள்ளது. இரு அணிகளும் சம அளவிலான புள்ளிகளை பெற்றிருந்தாலும் ஓட்டவிகித அடிப்படையில் சென்னை முன்னிலை முன்னிலை வகிக்கிறது. (ஐ)

# தேஷ் பாண்டேக்கு ஊதா தொப்பி; சமூகவலைத்தளங்களில் விமர்சனம்!

சென்னை, மே 02

நடப்பு ஐ. பி. எல். தொடரில் மொத்தமாக 17 விக்கெட்களை கைப்பற்றிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்து வீச்சாளர் துஷார் தேஷ்பாண்டே, ஊதா நிற தொப்பியை வென்றுள்ளார். அதிக விக்கெட்களை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்பதற்கான அங்கீகாரமாக இந்த ஊதா தொப்பி உள்ளது.

தேஷ் பாண்டேஇதுவரை சென்னை அணிக்காக இந்தத் தொடரில் 9 போட்டிகளில் விளையாடி உள்ள அவர், 33.2 ஓவர்கள் வீசி 369 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து, 17 விக்கெட்களை வீழ்த்தி உள்ளார். இதில் 76 பந்துகளில் ஓட்டம் எதையும் கொடுக்க வில்லை.

எனினும், நேற்று முன்தினம் சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் 4 ஓவர்கள் வீசி 49 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். இதன் மூலம் அவர் ஊதா நிற தொப்பியை வென்றுள்ளார்.


விக்கெட் வீழ்த்தும் திறன் கொண்டிருந்தாலும் ஓட்டங்களை சிக்கனமாக வழங்க அவர் தவறி வருகிறார். இதனால், அவரை கிண்டல் செய்யும் பாணியில் சமூகவலைத்தளங்களில் சிலர் விமர்சனங்களை பதிவிட்டும் வருகின்றனர். (ஐ)

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தொழிலாளர் தினம் மல்லாவியில்

முல்லைத்தீவு, மே. 02

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் தமிழ் தேசிய தொழிலாளர் தினம் மல்லாவியில் நேற்று மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.**






முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி நகரின் அனிஞ்சியன் குளம் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமான மேதின ஊர்திப் பவனி மல்லாவி நகரின் ஊடாக மல்லாவி சிவன் ஆலய வளாகத்தை அடைந்து அங்கு மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த மேதின ஊர்திப் பவனியில் நில ஆக்கிரமிப்பு மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்பவற்றுக்கெதிராக அடையாளங்களைத் தாங்கிய ஊர்தியுடன் வருகை தந்த மக்கள் வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம், தமிழர் கடல்,நில வளங்களை சுரண்டாதே ,இந்த மண் எங்களின் சொந்த மண் போன்ற கோசங்களை எழுப்பிய வண்ணம் பேரணியில் கலந்து கொண்டனர்.

அங்கு மக்கள் மத்தியில் மே தினப் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஸ் , மற்றும் சட்டத்தரணி காண்டீபன், மட்டு மாவட்ட அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மற்றும் இளைஞர் மற்றும் மகளிர் அணி தலைவர்கள், கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இணைப்பாளர்கள் உறுப்பினர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

## வடக்கு தனியார் வர்த்தக ஊழியர் சங்க ஏற்பாட்டில் மே தின ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே. 02



வடமாகாணத் தனியார் வர்த்தக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மே தின வாகன ஊர்வலமொன்று யாழ்.நகரில் நடைபெற்றது.

இதன்போது மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் என்பவற்றில் சிவப்புக் கொடியை கட்டியவாறு ஊர்வலம் இடம்பெற்றது.

மே தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணி யளவில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து மோட்டார் வாகன ஊர்வலம் ஆரம்பித்து யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நிறைவு பெற்றது.

உலகம் முழுவதும் மே தினம் உழைப்பாளர்கள் உரிமைக்காக கொண்டாடப்படுகின்ற நிலையில் நேற்று அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊர்வலம் இடம்பெற்றது.

(அ)

## பெண்கள் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா



மன்னார், மே. 02

மன்னார், தாராபுரம் ரூஹானிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை தாராபுரம், அல்-மினா மகா வித்தியாலய கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

அரபுக்கல்லூரியின் அதிபர்களான இல்ஹாம், சஹ்துல்லாஹ் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், விஷேட பேச்சாளராக அல்-ஹாபிழ் அல்-பாழில் றிஸ்வி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தாராபுரம் மண்ணின் முதலாவது பெண்கள் அரபுக் கல்லூரியான ரூஹானிய்யா பெண்கள் அரபுக் கல்லூரியிலிருந்து, முதன்முறையாக 13 ஆலிமாக்கள் பட்டம் பெற்று வெளியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

## மாக்சிச லெனினிசக் கட்சியினர் வவுனியாவில் மே தின ஊர்வலம்

வவுனியா, மே. 02



புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பிரதான மேதினக் கூட்டமும், ஊர்வலமும் வவுனியாவில் நேற்று காலை இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கடை வீதி வழியாக வைத்தியசாலை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா மாநகர மண்டபத்தை அடைந்தது. அங்கு மேதினக்கூட்டம் இடம்பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ம.பகிதரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய அமைப்பாளர் வே.மகேந்திரன், வன்னி மாவட்டங்களின் செயலாளர் நி.பிரதீபன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் இணைத்தலைவர் பூ.சந்திரபத்மன், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணி சார்பாக கே.ஜிந்திசன், தொழிற்சங்கம் சார்பாக க.மகேந்திரன்,பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் சார்பில் சிவந்தினி, ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

குறித்த ஊர்வலத்தில் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

## யாழ்.- கதிர்காம பாதயாத்திரை மே 6இல் சந்நிதியில் ஆரம்பம்!

அக்கரைப்பற்று, மே. 02

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வடக்கு கிழக்கு ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 46 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிக நீண்ட தூர கதிர்காம பாதயாத்திரையாக கருதப்படுகின்றது.

கடந்த 23வருடங்களாக சைவ மரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரை கதிர்காமக் கந்தனாலய கொடியேற்றத்தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

சந்நதியில் மே 06ஆம் திகதி அதிகாலை நடைபெறும் விசேட பூசையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்படும்.

தொடர்ந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மனாலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமி அணியில் வழமையாக பயணிக்கும் நூறுபக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம்பெறும்.

பாதயாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமைபோல பெறப்பட்டிருப்பதாக பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

இதேவேளை கதிர்காம ஆடிவேல்விழா உற்சவத்திற்கான கன்னிக்கால் அல்லது பந்தல்கால் நடும் வைபவம் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

எனவே யூன் 19ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை 4ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

(அ)

ஈழநாடு



## நாடு முழு...

**தமிழரசு கட்சி**

இலங்கை தமிழரசு கட்சியின் மே தினக் கூட்டம் 'தேசமாய் எழுவோம் தமிழர் தாகங்கள் சொல்வோம்' என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி பசுமை பூங்காவில் நடைபெற்றது.

சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு, வடக்கு - கிழக்கு தாயகத்தின் சுயாதீனம் , தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை , இனப்படுகொலைக்கு நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி மற்றும் புதிய பயங்கவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு உள்ளிட்டவற்றை கோஷங்களாக முன்வைத்து இந்தக் கூட்டம் நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில் பெருந்திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

**த. தே. ம. முன்னணி**

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னிணியின் மே தினக் கூட்டம் முல்லைத்தீவு - மல்லாவியில் - சிவன் கோவில் அருகே நடைம்பெற்றது. 'தமிழ் மரபுரிமையை சிதைக்காதே , மலையகத் தமிழர் இரத்தத்தை உறிஞ்சாதே!' என்ற தொனிப் பொருளில் இந்த மே தினக் கூட்டம் நடைபெற்றது.

**த. ம. வி. பு. கட்சி**

'வியர்வையில் வெற்றி' என்ற தொனிப் பொருளில் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு - களுதாவளை மைதானத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மே தினக் கூட்டம் நடைபெற்றது.

**ஐக்கிய தேசிய கட்சி**

'2048ஆம் ஆண்டை வெற்றி கொள்வோம்' என்ற தொனிப் பொருளில் ஐக்கிய தேசிய கட்சியின் மே தினக் கூட்டத்தை கொழும்பு - சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. பக்கச்சார்பின்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எனினும், ஜனாதிபதியின் விசேட அறிவித்தல் இதன் போது ஒளிபரப்பப்பட்டது. ஐ.தே.க. தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தலைமையில் , பிரதி தலைவர் ருவான் விஜயவர்த்தன உள்ளிட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

**பொதுஜன பெரமுன**

ஆளும் கட்சியான சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டம் கொழும்பு - பொரளையில் கெம்பல் மைதானத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

'சவால்களை தோற்கடித்து இலட்சியங்களை வெற்றி கொள்வோம்' என்ற தொனிப்பொருளில் நடந்த இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை.

**ஐக்கிய மக்கள் சக்தி**

'வேலைத்தளத்தில் ஆரம்பிக்கும் தாய் நாட்டின் போராட்டம்' என்ற தொனிப் பொருளில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நடந்தது.

மாளிகாவத்தை - பீ.டி. சிறிசேன மைதானம் அருகே பேரணி ஆரம்பித்து ஏ. ஈ. குணசிங்கபுர மைதானத்தை சென்றடைந்து கூட்டம் நடந்தது. இதில், பங்காளிக் கட்சிகளான மலையக மக்கள் முன்னணி , அகில இலங்கை முஸ்லிம் காங்ரஸ் , சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்டவை பங்கேற்றிருந்தன.

ராஜித சேனாரத்ன, மயந்த திஸநாயக்க ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இதேநேரம், வடிவேல் சுரேஷ் தனியாக பதுளையில் கூட்டத்தை நடத்தினார். இதில், வேலுகுமார், காவிந்த ஜயவர்த்தன ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

**சுதந்திரக் கட்சி**

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் மே தினக் கூட்டம் கண்டியில் இடம்பெற்றது. 'ஒன்றிணைவோம் வலுப் பெறுவோம்' என்ற தொனிப்பொருளில் நடந்த இந்தக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்களான நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த அமரவீர, ரஞ்சித் சியாம்பலபிட்டிய மற்றும் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸநாயக்க உள்ளிட்ட பலர் பங்கேற்கவில்லை.

**ஜே. வி. பி.**

'நாட்டை விற்கின்ற, மக்களை வதைக்கின்ற, ஊழல்மிக்க ஆட்சியை தோற்கடிப்போம். மக்கள்நேயமுள்ள ஆட்சியைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப் பொருளில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) மே தினக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. 'சிவப்பு மே தினக் கூட்டம்' என ஜே.வி.பி. இதனை அடையாளப்படுத்தியிருந்தது.

மே தின ஊர்வலம் கொழும்பு - பி.சி. ஆர். மைதானத்திலிருந்து விகாரமாதேவி பூங்கா அருகே நிறைவடைந்தது. சிவப்பு உடை அணிந்த பல ஆயிரக்கணக்கானவர்கள் இதில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஈ. பி. டி. பி. கட்சி மட்டுமே மே தினக் கூட்டத்தை நடத்தியது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் உள்ளே)

## அல்லைப்...

மோதிய காரும் தடம்புரண்டதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியில் அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையாக உள்ள வளைவில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த கோப்பாயை சேர்ந்த நவநீதராசா நிலக்சனா (வயது 26), மானிப்பாயை சேர்ந்த கீதரட்ணம் திவ்யா (வயது 31) ஆகியோரே உயிரிழந்தனர்.

காரில் பயணித்த வடமராட்சி - பருத்தித்துறையை சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுதாகரன், கருணாமூர்த்தி விமலாதேவி ஆகியோர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் திசையில் பயணித்த கார், வீதியின் மத்திய கோட்டை விட்டு விலகி யாழிலிருந்து ஊர்காவற்துறை செல்லும் திசையில் பயணித்த மோட் டார் சைக்கிளை மோதியது என்று விபத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ஐ-03)

## இனப் பிரச்...

அத்துடன், தமிழ் சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் விலகி நிற்பது வீண். அனைவரையும் உள்ளடக்கிய புதிய - போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் நிலையான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடந்தது. இதில், மெய்நிகர் வழியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

இனப் பிரச்னையை மேலும் இழுத்தடிக்காமல் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்வை முன்வைக்க வேண்டும்.

எனது முயற்சி அரசியல் அல்ல. நாட்டின் பொருளாதாரத்தை சரியாக நிர்வகித்தல் மக்கள் மீதான சுமைகளை குறைப்பதே. நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பலம் எனக்கு இருக்கிறது. அதற்காக ஒத்துழைக்கும் அமைச்சர்களுடன் இணைந்து செயல்பட முடியும் என்ற நம்பிக்கையால்தான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்டேன் - என்றார். (ஐ)

## தந்தை...

ஆட்சி அதிகார திமிரும் உடையவையாக தமது அரசுகளை கட்டிவளர்க்கின்றன. தமது அதிகாரபீடத்தை மையமாகக் கொண்டே தொழிலாளர் நலன்களைச் சிந்திக்கின்ற அரச பீடங்களாக அவை இன்று வளர்ச்சி பெற்றிருக்கின்றன. பொருளாதாரப் பெருமந்தமும் தொழிலாளர்களின் சீவியச் சீரழிவும் அதனால் எழுந்துள்ள விளைவுகளும் தமிழ் மக்களை மாத்திரமன்றி சிங்கள, முஸ்லிம் சகோதரர்களையும் பேதமின்றி சுட்டெரித்து வருகிறது.

இலங்கைத்தீவு அதலபாதாளத்தை நோக்கி தனது பொருளாதாரத்தை பயணப்பட வைத்துள்ள அதேவேளை, தமிழ்த் தேசிய இனத்தின் பொருளாதார வளத்தையும், பொருளாதார மேம்பாட்டையும் சிதைத்து தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரித்துகளை பூரணமாக பறித்து விடுவதற்காக திட்மிட்டு செயலாற்றி வருகிறது. வடக்கு, கிழக்கு எங்கும் தமிழர் நில அபகரிப்பு பரந்துபட்ட அளவில் தொடர்ந்து வருகிறது. தமிழர் தொன்மங்களைப் பிடுங்கி எறிந்து பௌத்த கலாசாரத்தை எமது தாயகத்தில் திணிப்பதற்கு வலிமையான செயல்பாடுகள் முனைப் படைந்துள்ளன.

போதிய தொழிலும் போதிய வருமானமும் இன்றி வறுமை மிகுந்த சமூகமாக வட, கிழக்கு புள்ளி விவரங்களால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. போதையையும், வன்முறையையும் கட்டுப்படுத்த முடியாத வகையில் சட்டத்தின் ஆட்சி செயலிழந்து இருக்கிறது. மொத்தத்தில் அபிவிருத்திகள் எவையுமின்றி எல்லாவகையிலும் ஆக்கிரமிக்கப்பட்ட தேசமாக எமது தமிழீழ தேசம் உருவாக்கப்பட்டு வருகிறது.

சிக்கல் நிறைந்த வலையென தமிழர் தேசத்தையும், தேசத்து தொழிலாளர்களையும் விசேடமாக தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பையும் அழிக்கும் வகையில் பின்னப்பட்டுவரும் அதிகார சதி வலைக்கெதிராக போராடுவதே தமிழர் தேசத்துக்குள்ள ஒரே வழியாகும் என நாம் திடமாக நம்புகிறோம். புத்திபூர்வமான செயல்முறை ஊடாக தமிழ் மக்களின் உரித்துக்களைப் பேண அயல் அரசுகளும், பன்னாட்டு அரசுகளும் தவறியே வருகின்றன. இந்நிலையில் இங்கே கூடியிருக்கும் ஆயிரம் ஆயிரம் இளைஞர்களும் தந்தை செல்வா அவர்கள் உணர்த்திய சுயாட்சி நோக்கிய பயணத்தை, ஓர் அஞ்சல் பரிமாற்ற போராட்டகாரர்களாக கையேற்க இருப்பதையே கிளிநொச்சியில் நடைபெறும் இம் மே நாள் வெளிப்படுத்தி நிற்கிறது.

அத்தகைய மே நாள் பிரகடனத்தை ஏற்று நின்றும், துணிந்து சென்றும் சாத்தியமான வழிமுறைகள் எல்லாவற்றிலும் போராடி தமிழர்களின் தாகமாகிய சுயநிர்ணய உரிமையை அடைந்தே தீருவோமென திடசங்கற்பம் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## கொழும்பில்...

டல் தோட்டத்தைச் சேர்ந்த 4 பெண்கள் உட்பட 9 பேர் இந்த துப்பாக்கி சூட்டில் காயமடைந்தனர்.

கொழும்பு துறைமுகத்தின் ஆறாவது நுழைவாயிலுக்கு அருகே துறைமுகத்துக்கு சொந்தமான இரும்புகளை திருட வந்தனர் என்று கூறப்படும் இருவரை விசாரணை செய்த போது அங்கு சிலர் அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

இதன்போது, தனியார் பாதுகாப்பு பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க சிலர் முயற்சித்தனர். இதையடுத்து மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கி சூட்டை நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

## ராஜபக்ஷக்...

சியலின் நோக்கம் முறை மையில் மாற்றங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும் என்பதேயாகும். தற்போது ஊழல், மோசடியாளர்களே ஆட்சியமைத்துள்ளனர். அதன் காரணமாகவே உள்நாட்டுக்கு அப்பால் சென்று, வெளிநாடுகளிடம் இலஞ்சம் கோரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமக்கு ஒரு போதும் இவ்வாறான அரசாங்கத்துடன் இணையும் எண்ணமில்லை. மாறாக ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே நாம் அரசாங்கத்துக்கு செல்வோம். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவும் அவரின் ஆட்சி காலத்தில் இரு சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கின்றார்.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்களுக்கான சலுகைகளை நீக்கவோ, நிவாரணங்களை வழங்காமலோ இருக்கவில்லை. ஆனால், தற்போதைய அரசாங்கம் அவ்வாறல்ல. எனவேதான் நாணய நிதிய ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் நாம் பங்கேற்கவில்லை.

உலகில் முதன்மையான நாடாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும். இன , மத பேதமற்ற தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசாங்கம் எம்மால் அமைக்கப்படும். இந்த மே தினத்தில் எமது சபதம் யாதெனில் ராஜபக்ஷர்களைப் பாதுகாக்கும் அரசாங்கத்தை வீழ்த்துவதேயாகும் - என்றும் கூறினார்.

## ஜனாதிபதி...

தேசிய கட்சி பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

சிறிகொத்தாவில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் 2024இல் இடம் பெற இருக்கிறது. அதில் ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராக களமிறங்குவது நிச்சயமாகும். இதேபோன்று அதில் அவர் வெற்றி பெறுவதும் உறுதியாகும்.

ஏனெனில், தேசத்தின் தேவையை நிறைவேற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்க தேசிய வேட்பாளராக களமிறங்கவுள்ளார். அவர் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடமாட்டார் -என்றார். (ஐ)

## அதிகாரத்தை...

மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம் என்று முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜ பக்ஷ மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு - பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அதிகாரத்துக்காக நான் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எதிராக செயல்படவில்லை. தவறான தீர்மானங்களை தற்போது திருத்திக் கொண்டுள்ளோம். நாடு என்ற ரீதியில் பெரும் சவால்களை எதிர்கொண்டவேளையில்தான் ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்றேன்.

சவால்களை கண்டு, நானும் எனது தரப்பினரும் ஒருபோதும் பின்வாங்கவில்லை. பல்வேறு சவால்களில் இருந்து மீள்வதற்கு மக்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

நாட்டின் தேசியத்தை இல்லாதொழிக்க ஆரம்ப காலத்தில் சர்வதேச சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டமைக்கு பல விடயங்கள் சான்று பகிர்க்கின்றன. மக்களுக்காக ஆட்சியை கைப்பற்றவும் மக்களுக்காக ஆட்சியை விட்டுக் கொடுக்கவும் அரசியல்வாதிகள் பழகிக் கொள்ள வேண்டும். பொய்யான விமர்சனங்கள் எழுந்தபோது மக்களுக்காக அதிகாரத்தை விட்டுக் கொடுத்தோம். மக்கள் தற்போது உண்மையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தேவையாயின் பலம் மிக்க சக்தியாக ஒன்றிணைந்து மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் தனியார் ஊழியர்களின் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டும்

## வடமாகாண ஊழியர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே. 02

**வடமாகாணத் தனியார் ஊழியர்களின் பிரச்னைகள் கருத்திற்கொள்ளப்பட்டு தீர்த்து வைக்கப்படவேண்டும் எனவும் சங்கத்தின் பதிவின் அடிப்படையில் ஊழியர்களின் பிரச்னைகள் 6 மாத காலத்துக்குள் தீர்த்து வைக்கப்படவேண்டும் எனவும் வடமாகாண தனியார் சங்கத்தின் உறுப்பினர் லஸ்மன் தெரிவித்தார்.**

யாழ் வடமாகாண தனியார் சங்கத்தின் ஏற்பாட்டில் கச்சேரி பிரதான வாசலில் இருந்து யாழ். மத்திய பஸ் நிலையம் நோக்கி மாபெரும் வாகனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பேரணியில் கலந்து கொண்ட பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பேரணியானது ஊழியர்களின் நலன் கருதியே முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான பலம் எம்மிடம் தற்போது உள்ளது.

வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து செயலாற்ற தீர்மானித்துள்ளோம். அந்த வகையில் வரும் வாரமளவில் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

அவ்வாறு அவர்கள் எம்முடன் இணைந்து செயற்படாவிடில் எமக்காக பண உதவி முதற்கொண்டு பல்வேறு உதவிகளை செய்வதற்கு இங்கும் சரி வெளிநாட்டிலும் சரி பக்கபலம் காணப்படுகின்றது.

இந்தச் சங்கத்தைப் பதிவது தொடர்பிலும் பல குற்றசாட்டுகள் வைக்கப்பட்டபோதிலும் ஒரு அமைச்சரிடம் கலந்துரையாடி அவரின் உதவியின் மூலம் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

அந்த பதிவின் அடிப்படையில் ஊழியர்களின் பிரச்னைகளை 6 மாத கலங்களுக்குள் தீர்த்து வைப்போம்.

இன்றைய தினம் (நேற்று) கடையடைப்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டபோதிலும் சிலர் வர்த்தக நிலையங்கள், கடைகள் போன்றவற்றை திறந்துள்ளார். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் வருகின்ற வாரமளவில் திணைக்களத்தின் உதவியுடன் ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று ஊழியர்களுக்குரிய சலுகைகள் ஒழுங்காக செய்யப்பட்டுள்ளதா என்பதனை பார்க்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# சமையல் எரிவாயுவின் விலையும் குறைகிறது!

கொழும்பு, மே. 02

சமையல் எரிவாயுவின் விலை இன்னும் சில தினங்களில் குறையும் என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

பணவீக்கம் 70 சத வீதத்திலிருந்து 35 சத வீதமாக குறைந்துள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் அதை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வர முயற்சிக்கிறோம் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய சாகல ரத்நாயக்க, ‘எண்ணெய் விலை குறைந்துள்ளதால், அடுத்த சில நாட்களில் எரிவாயுவின் விலையும் குறையும் என நம்புகிறோம் என்றார். (அ)

# சட்ட சிக்கல் தீர்ந்தால் தேர்தலை நடத்தலாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே. 02

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான கலந்துரையாடலுக்காக நிதி அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை எந்தவொரு பதிலும் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறிருப்பினும் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை தாம் இன்னும் கைவிடலில்லை என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்தோடு மாகாணசபைகள் தொடர்பில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு பாராளுமன்றத்தினூடாக தீர்வு வழங்கப்பட்டால் அந்தத் தேர்தலையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் குறித்து எந்தவொரு முன்னேற்றமும் தென்படாமலுள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை நாம் கைவிடவில்லை. தேர்தலுக்கான அடிப்படைச் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துக்கொண்டே இருக்கின்றோம்.

அதன் ஒரு பகுதியாக விசேட தேவையுடையோருக்கு வாக்களிப்பதற்கான பயிற்சிகள் வழங்கிக்கொண்டிருக்கின்றோம். இம்மாதம் முழுவதும் இந்த பயிற்சிகள் இடம்பெறும்.

அத்தோடு இவ்வாண்டுக்கான வாக்காளர் இடாப்பை திருத்தும் பணிகளும் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்களை வீடுகளுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை கிராம உத்தியோகத்தர்கள் தற்போது முன்னெடுத்துள்ளனர். படிவத்தை பூரணப்படுத்தி விரைவாக ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனான சந்திப்பின் பின்னர் அரச தரப்பிலிருந்தோ அல்லது நிதி அமைச்சு மற்று திறைசேரியிடமிருந்தோ தேர்தலுக்கான நிதி தொடர்பில் எந்தவொரு அறிவிப்பும் கிடைக்கப் பெறவில்லை.

நிதி அமைச்சுடனான கலந்துரையாடலுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கும் எந்த பதிலும் இல்லை. திறைசேரியுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என்றாலும், நிதி அமைச்சரின் அனுமதி வழங்கப்படவேண்டும்-என்றார்.

இதேவேளை, தற்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றமை குறித்து பதிலளித்த அவர்,

மாகாணசபைத் தேர்தல் குறித்த சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு , அதற்குரிய நிதியை வழங்கினால் எந்த சந்தர்ப்பத்திலும் அந்த தேர்தலை நடத்துவதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

மாகாணசபை குறித்து காணப்படும் சட்ட சிக்கலுக்கு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும் வரை அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாது.

இன்று செவ்வாய்கிழமை இடம்பெறவுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் வாராந்த ஒன்று கூடலில் இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும்-என்றார். (அ)

# இன, மத பேதம் இல்லாத ரணிலை ஆசியாவின் உச்சியில் இருத்துவோம்!

## மே தினக் கூட்டத்தில் வஜிர

கொழும்பு, மே 02

“இன, மத பேதங்கள் அற்ற தலைவரான ரணிலை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எமது கடமையாகும்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின கூட்டம் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“ஐக்கிய தேசிய கட்சி வீழ்ச்சி கண்டிருந்த போதும் கட்சியுடன் இணைந்திருந்தோரே இங்கு அதிகளவில் கூடியிருக்கின்றனர். 1994இற்கு பிறகு ஏறக்குறைய முப்பது வருடங்களாக உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் ஒருவரை கண்டு அஞ்சின. அது தற்போதைய



தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே. அவரை வீழ்த்த எல்லா வழிகளிலும் முயன்றனர்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முயன்ற எமது கட்சின் தலைவர்கள் பலரும் எதிர்பாராத விதத்தில் மரணம் அடைந்தனர். ஜே. ஆர். ஜெயவர்த்தன, பிரேமதாஸ, லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்க போன்ற தலைவர்கள் வீதிகளில் கொல்லப்பட்டனர். ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க என்ற ஒரு தலைவர் மிஞ்சி இருந்தமையாலேயே இன்று கொழும்பை சுற்றி இடம்பெறும் மே தினக் கூட்டங்களுக்கு வருவதற்கு மக்களுக்கு எரிபொருள் கிட்டியது.

அத்துடன், இன, மத பேதங்கள் அற்ற தலைவரான ரணிலை ஆசியாவின் உச்சியில் அமர்த்த வேண்டியது எமது கடமையாகும்.

முழு பாராளுமன்றமும் அரச செயல்பாடுளில் ஈடுபடும் வகையிலான முறையொன்றை உருவாக்க அவர் முயற்சிக்கிறார். டி. எஸ் சேனாநாயக்கவும் இந்நாட்டவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டுதான் சுதந்திரத்தைப் பெற்றார். அந்த வகையில் தற்போதைய ஜனாதிபதியின் வீட்டுக்கு தீயிட்டாலும் அவர் முடங்கிப் போய்விடவில்லை. அதனால் 2048 என்ற இலக்கை நோக்கி முன்னேறுவோம் - என்றார். (ஐ)

# 836 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள் நேற்று சிக்கின!

## இருவர் கடற்படையால் கைது

கொழும்பு, மே. 02

புத்தளம் - கற்பிட்டிப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 836 கிலோகிராமுக்கும் அதிகமான பீடி இலைகளுடன் இருவரை கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இரவு மற்றும் நேற்று அதிகாலை கற்பிட்டி, பராமுனை மற்றும் குடாவ கரையோரக் கடற்பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இந்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன.

வடமேற்கு கடற்படை கட்டளை பிரிவினரால் நேற்று இரவு பராமுனை கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின்போது, சந்தேகத்துக்கிடமாக படகொன்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அதன்போது, குறித்த படகிலிருந்து 550 கிலோ 750 கிராம் பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18 மற்றும் 23 வயதுடைய கற்பிட்டி அனவாசலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இதேவேளை, நேற்று அதிகாலை குடாவ கடற்கரையில் மேற்கொண்ட தேடுதலின்போது, சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த பீடி இலைகள் அடங்கிய 9 பைகள் மீட்கப்பட்டன.

அவற்றிலிருந்து 286 கிலோ 200 கிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டன.

இந்த நிலையில், 836 கிலோ 950 கிராம் பீடி இலைகளுடன் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கட்டுநாயக்க சுங்க அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.